தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 45 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20

தமிழ்நாட்டின் தேர்தல் கட்சிகள் பலவற்றுக்கும் உறுதியான கொள்கைகள் இல்லை.. சில கட்சிகள் தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளையும் படிப்படியாகக் கைவிட்டுவிட்டன.

தமிழ்நாடு பாழாகிக் கொண்டிருக்கிறது.. மாநிலங்கள் தங்களின் அடையாளங்களை இழந்து அழிந்து கொண்டு வருகின்றன.. எந்த வகைச் சமரச இணக்கப் போக்கிற்கும் இடம் கொடுக்காமல் கொள்கை அளவிலும் நடைமுறை அளவிலும் உறுதி வாய்ந்த இளைஞர்களைக் கொண்ட இயக்கங்களே தமிழ்நாட்டில் மாற்றத்தை உருவாக்கிட வேண்டும்..

தமிழ்நாட்டின் அடையாளங்களை, மாநிலங்களின் அடையாளங்களை யெல்லாம் படிப்படியாகச் சிதைத்து வருகின்றது இந்தியப் பாசிச பார்ப்பனிய அரசு..

தமிழ்நிலம் என்கிற பெரும் பரப்புடைய தமிழ்நாடு, ஏறத்தாழ அரசு என்கிற அடிப்படையிலேயே 2000 ஆண்டுகளுக்கும் முந்தைய வரலாற்றைக் கொண்டது..

ஆனால், ஆங்கிலேயர்கள் வந்த பிறகு அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தியாவைத் தங்கள் அதிகாரத்தின் கீழ்க் கைமாற்றிக்கொண்டு இந்தியப் பார்ப்பனிய பாசிச அரசு எல்லா மாநிலங்களையும் அடக்கி ஒடுக்கி அவற்றின் வரலாற்றை எல்லாம் சிதைத்து இந்திய அரசைப் பாசிச வெறியரசாக அதிகாரப்படுத்தி வருகிறது..

தமிழ்நாடு மட்டுமன்றி மாநிலங்கள் அனைத்துமே தங்களின் உரிமைகளைப் படிப்படியாக இழந்துவிட்டன..

காஷ்மீரம் ஒரு மாநிலமாகவே இப்போது இல்லை.. எந்த மாநிலத்தையும் எத்தனைக் கூறுகளாக வேண்டுமானாலும் உடைப்போம் பிரிப்போம் சிதைப்போம் என்கிற அதிகாரத் திமிரை அரசியல் சட்டத்திலேயே கொண்டிருக்கிறது இந்தியப் பாசிச அரசு..

மாநிலங்களிடமிருந்து இந்திய அரசு ஒவ்வொருமுறையும் ஒவ்வோர் அதிகார உரிமைகளையும் பறித்துச் செல்லுகிறது..

அண்மைச் சில மாதங்களிலேயே...

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் **விக்சித் பாரத் ஜி ராம்ஜி** என்று பெயர் மாற்றப்பட்டிருப்பதோடு 100 நாள் வேலைத்திட்டம் 125 நாளாக உயர்த்தப்பட்டதாகக் காட்டப்பட்டு அதற்கான தொகையைப் பன்மடங்கு அதிகப்படுத்தி உத்தரப்பிரதேச மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கும் இந்திய அரசு, தமிழ்நாட்டிற்கு 2023 - 24 ஆம் ஆண்டுகளில் 12698 கோடி கொடுத்திருந்த நிலையில் 2025 - 26 ஆண்டிற்கென 5878 கோடி மட்டுமே கொடுக்கிறது..

உயர்கல்வியைச் சீர்குலைக்கும் நோக்கத்தில் நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளால் நசுக்கப்பட்டு வருகிற மாணவர்களின் வாழ்க்கை.. இப்போது, **விக்ஷித் பாரத் சிக்ஷா அதிஷ்தான்** என்கிற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களால் பல்கலைக்கழகங்களை முழுக்கத் தாங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி வைக்கிறது..

பல்கலைக்கழகங்களுக்கான மானியத்தை 2014 - 15 இல் 8,905 கோடியில் இருந்து, 2025 - 26 இல் 3,336 கோடியாகக் குறைத்திருக்கிறது. இதன் மூலம் மாநிலங்களின் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கான ஒதுக்கீடு 2014 - 15 இல் 1185 கோடியாக இருந்தது, 2025 - 26 இல் 62 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.. தொகை ஒதுக்கீடு குறைப்பு மட்டுமின்றி புதிய திட்டத்தின் கீழ் மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்தின் கட்டுப்பாடும் இந்திய அரசுக்குரியதாக மாற்றப்படுகிறது..

அதேபோல் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இன்று இருந்ததை **அந்தியோதயா அன்ன யோஷனா** எனப் பெயர் மாற்றம் செய்து குடும்பங்களுக்கு மாதம் 35 கிலோ அரிசி உள்ளிட்ட பொருள்கள் வழங்கி வந்த நிலைகளை மாற்றி ஏழு கிலோ என்ற அளவில் குறைத்து அதை வழங்குவதில்கூட எண்ணற்ற கெடுபிடிகளை உருவாக்கி வைத்திருக்கிறது இந்திய அரசு..

இவையெல்லாம் அண்மைக்காலத்தில் இந்தியப் பார்ப்பனிய பாசிச அரசு செய்திருக்கிற கொடுமைகள்..

இந்நிலையில்தான்,

தென் மண்டலங்களின் கவுன்சில் என்கிற பெயரில் தமிழ்நாட்டை அதன் தனித்தன்மையை, கேரளத்தை அதன் தனித்தன்மையை, ஆந்திரத்தை, கர்நாடகத்தை, தெலுங்கானாவை அவற்றின் தனித்தன்மைகளை அழிக்கும் நோக்கத்தோடு 31 ஆவது கூட்டம் கூட்டப்பட்டது..

தென் மாநிலங்களின் கூட்டமைப்பு என்று அந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள், கட்சிகள், இயக்கங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்குவது என்பது வேறு.., மாநிலங்களின் அடையாளங்களை அழித்து ஒழித்துவிட வேண்டும் எனும் பாசிச பார்ப்பனிய அதிகாரங் கொண்ட இந்திய அரசு தானாக முன்வந்து தென் மண்டலக் கவுன்சில் என்கிற பெயரில் மாநிலங்களின் அடையாளங்களை எல்லாம் அழிக்கிற நோக்கத்தில் ஒரு தென் மண்டலக் கவுன்சிலை உருவாக்கிச் செயல்படுத்துவது என்பது வேறு..

அத்தகைய அழிப்பு முயற்சிக்குத் தமிழ்நாட்டு முதலமைச்சரையே பலிக்கடாவாக ஆக்குகிறார் அமித்ஷா..

1956 இல் தொடங்கி, அதாவது மொழி வழி மாநிலங்கள் உருவாக்கப்பட்ட காலம் தொடங்கி, எப்படியாவது இந்த மொழி வழி மாநிலங்களை அடையாளம் இல்லாமல் அழித்து விட வேண்டும் எனும் நோக்கத்தில் 5 மண்டலங்களாக இந்தியாவைப் பிரித்து அதிகாரம் செய்து வந்திருக்கிறது இந்தியப் பாசிச வெறி அரசு..

அதில் ஒரு மண்டலம்தான் தென் மண்டலக் கவுன்சில். இதில், தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம், தெலுங்கானா, புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள் இவையெல்லாம் இருக்கின்றன..

இதிலும் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகா, தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் தவிர புதுச்சேரிக்கும் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குமான முதலமைச்சர்கள் பங்கேற்க அழைக்கப்படுவதில்லை.

அவற்றை மாநில அரசு அதிகாரங்களாக இந்திய அரசு மதிப்பதே இல்லை.. எனவே அந்த மாநிலத்தின் துணைநிலை ஆளுநர்களை மட்டும் அழைத்துக் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர்களுக்கு இணையாக அமர்த்திக் கொள்கிறார்கள். அவர்களைப் பொறுத்த அளவு அனைவரும் ஒருவரே என்பது இந்திய அரசு அதிகாரத்தின் எண்ணம்.

இதன் தலைவராக உள்துறை அமைச்சர் இருப்பாராம்.. துணைத் தலைவராகச் சுழற்சி முறையில் ஒவ்வொரு மாநில முதலமைச்சரையும் அமர்த்துவார்களாம்.. இப்போது அவர்களின் அரசியல் சூழலின் தேவைக்காக விஜயைத் துணைத் தலைவராக அமர்த்திக் கொண்டனர்.

சென்னைக்கு அருகில் கோவளத்தில் உள்ள ஒரு பகட்டான விண்மீன் விடுதியில் கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்திற்கான மொத்தச் செலவும் மாநிலங்களின் தலையில் என்கிற வகையில் தமிழ்நாட்டின் தலையில்தான் ஏற்றப்பட்டிருக்கிறது..

எங்கே, இந்த மாநிலங்கள் எல்லாம் தங்களின் அதிகாரத்திலிருந்து விடுபட்டுத் தனித்துப் பேசி உறவு கொண்டு தங்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பி விடுமோ என்கிற அதிகார வெறியில்தான் இந்திய அரசு இவ்வாறு செய்கிறது..

ஒற்றுமை என்பதெல்லாம் மக்களாகவோ மாநிலங்களாகவோ அமைத்துக் கொள்ளுகிற ஒற்றுமையாக இருக்கக் கூடாது.. இந்திய அதிகார வெறி அரசின் கீழ் அடக்கப்பட்டிருக்கிற உறவே ஒற்றுமை என்று அவர்கள் கற்பிக்கிறார்கள்..

அந்த வகையில், அறுபவனையே நம்பி ஏமாற்றப்படுகிறது தமிழ்நாடு..

அதற்குச் சரியான அடிபணியும் ஆளாக, அவர்களுக்குக் கிடைத்திருப்பவர்தான் விஜய்..

இவை குறித்தெல்லாம் தமிழ்நாடு அரசோடு புதிய உறவாய்ச் சேர்ந்து ஆட்சி செய்து கொண்டிருக்கிற திருமாவளவனோ, வைகோவோ கேள்வி ஏதும் எழுப்பாமல், வாய்ப்பொத்திக்கொண்டு அதிகாரத்தில் பங்கு கேட்டுத் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள்..

அமித்ஷா தலைமையிலான **தென் மண்டலக் கவுன்சில்** மாநாட்டை எதிர்த்தோ மறுத்தோ எந்தக் கட்சிகளும் அறிக்கைகள்கூட விடவில்லை..

தமிழ்நாட்டின் உரிமைகள் நோக்கிச் செயல்படுகிற இயக்கங்கள் மட்டுமே எதிர்த்துக் கருத்து பரப்பின..

பொதுவுடைமைக் கட்சியினர் ஏதும் வலுவாக எதிர்ப்பு தெரிவிக்காமல் உறவைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர்..

எல்லாம் நடந்து முடிந்த பிறகு தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கப் போகிற நிலையே ஆகப்போகிறது?

ஏற்கனவே, இந்தியப் பாசிச பார்ப்பனிய அரசின் வலியுறுத்தலுக்கு அடி சாய்ந்து தமிழ்நாடு அரசு எடுபிடி வேலை செய்து கொண்டிருப்பதைப் பொதுவுடைமைக் கட்சிகள் வலுவாக எதிர்க்காமல் இருக்கின்றன.

திண்டுக்கல் குஜிலியம்பாறையின் வட்டாட்சியர், சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள பொதுவுடைமை இயக்கத்தவர்களைக் கணக்கெடுக்க சொல்வதும், கல்லூரிக் கல்வித்துறை இயக்கக அலுவலர்கள் பொதுவுடைமைக் கட்சிகளின், கரப்பான் பூச்சி இயக்கத்தின் மாணவர்கள் இயக்கங்கள் கல்லூரிகளுக்குள் நுழைந்து விடாதபடி பார்த்துக் கொள்ளச் சொல்வதும் பெரும் போராட்டங்களால் பின்வாங்கப்பட்டாலும், அவற்றை ஏன் அவ்வாறு அமைத்தார்கள் என்பதை அழுத்தம் கொடுத்து எதிர்க்கவில்லை.. பூசி மெழுகிச் சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பி அமைச்சர் சொன்ன பசப்பு விடையில் நிறைவு கொள்ளுகிறார்கள்..

இந்தியப் பாசிச பார்ப்பனிய பாஜகவை எதிர்த்துத் தேர்தலுக்கு முந்தைய மாதங்களில் பேசிய, போராடிய திமுகவுக்கோ இப்போதைய புதிய எதிரி விஜயாகிப் போனது.. எனவே பாசிச பார்ப்பனிய பாஜகவை எதிர்க்கிற அரசியல் அதனிடம் மங்கிப் போய்விட்டது.

அப்போது திமுகவுடன் உறவு கொண்டிருந்த மதிமுகவோ, விடுதலைச் சிறுத்தைகளோ இப்போது விஜய் நிழலில் கிடைத்த சலுகைகளில் ஒட்டிக்கொண்டு கிடக்கின்றனர்..

தமிழ்நாடு சட்டமன்றத்திற்குள் விஜய்க்கு எதிராகவும், திமுகவுக்கு எதிராகவுமான சில்லறைத்தனமான செய்தி மோதல்களே பெரிய அளவில் உரையாடல்களாக மாற்றப்படுகின்றன..

தமிழ்நாட்டுக் கல்வி உரிமைகளை எல்லாம், கனிம வளங்களை எல்லாம், கடல்வள உரிமைகளை எல்லாம் முன்னைவிடக் கூடுதலாகப் பறித்துக் கொண்டு அதிகாரத் திமிரோடு இருக்கிற இந்தியப் பாசிச பாஜக அரசை எதிர்த்துச் சட்டமன்ற கூட்டங்களில் குரல்கள் எழுவதில்லை, எந்தத் தேர்தல் கட்சிகளும் முணுமுணுப்பதுகூட இல்லை..

பிற மாநிலங்களில் இல்லாத அளவிற்குத் தமிழ்நாடு சூறையாடப்படுகிறது.. 78 சுங்கச்சாவடிகளில் வழிப்பறிக் கொள்ளையடிக்கப்படுகிறது.. ஜிஎஸ்டி என்கிற பெயரில் தமிழ்நாட்டின் உழைக்கும் மக்களின் பணங்களும், உழைப்பும் பறிபோகின்றன..

தமிழ்த்தேசிய அடையாளத்தையே இழந்து போகிறது தமிழ்நாடு..

தமிழனின் கீழடி அடையாளத்தைக் கூட பெருமையோடு உலகிற்கு பறைசாற்ற முடியவில்லை தமிழர்களால்.. தங்களைத் தமிழர்கள் என்று பதிவு செய்து கொள்ள முடியாத அடிமை இனம்..

கேட்க நாதி இல்லை..

தமிழ்த்தேசிய அரசியல் கொள்கைகளை முன்னெடுத்துப் பேசிய தேர்தல் கட்சிகள் தடுமாறுகின்றன.. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி விஜயோடு சேர்ந்து கொண்டு தமிழ்த் தேச அரசியல் பேசப் போகிறதாம்.. 35 ஆண்டுகளுக்கும் மேலாகச் சாதி ஒழிப்புத் தமிழ்த் தேசிய அரசியல் பேசிய வந்த திருமாவளவன் வந்தடைந்த புகலிடம் பாஜக நிழலிலான விஜயின் கட்சியாகிப் போனது..

தமிழ்நாட்டின் தேர்தல் கட்சிகள் பலவற்றுக்கும் உறுதியான கொள்கைகள் இல்லை.. சில கட்சிகள் தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கைகளையும் படிப்படியாகக் கைவிட்டுவிட்டன.

தமிழ்த்தேசம் என்பது தாய் மொழியைத் தமிழாகக் கொண்ட ஒருவர் முதலமைச்சராவது என்று பேசிய நாம் தமிழர் கட்சி.. அந்த அடிப்படையில் ஒவ்வொருவரையும் பிறப்பால் மதிப்பீடு செய்வதும் பிறப்பால் பிறமொழியினர் என இழிவுபடுத்துவதுமே அவர்களின் அரசியல் பார்வையில் தமிழ்த் தேசமாகச் சுட்டப்பட்டது..

இந்தியத்தை, வல்லரசியத்தை முதன்மையாக எதிர்க்காத பிழையான அவர்களின் அரசியல் பார்வையும், நடைமுறையும் தோல்வியையே அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது..

இப்போது திருமாவளவன் தமிழ்த் தேசிய மாநாட்டை நடத்தி, கணக்கில் அடங்காத கூட்டம் வந்து குவிந்துவிட்டதாய்ப் பெருமைப்படுகிறார்..

வந்து குவிந்த கூட்டம் திருமாவளவன் தொடக்கக் காலத்தில் பேசிய கொள்கைக்காக வந்த கூட்டம் அல்ல என்பதும், நடிகர் விஜயோடு திருமாவளவனையும் இணைத்துப் பார்த்துச் சுவைத்து 'விசில்' அடிக்கும் கூட்டமே தவிர, சாதிஒழிப்போடு இணைந்த தமிழ்த் தேசிய விடுதலைக்காகப் போர் குரல் எழுப்புகிற கூட்டம் இல்லை என்பதும் அவருக்கே தெரியும்...

நேற்று வரை பல காலம் எதற்கும் பணியாமல், விலை போகாமல் தனக்கெனத் தனி அடையாளத்தைக் கொண்டிருந்த தமிழக வாழ்வுரிமைக் கட்சி வேல்முருகன், பாஜகவின் மடியில் முடங்கிக் கிடந்த கிருஷ்ணசாமியையும், ஜி போட்டுக் கொள்கிற சில சாதிக் கட்சிகளையும் அணி சேர்த்துக் கொண்டு கூட்டுக் குரல் எழுப்ப முனைகிறார்.. தாம் சகதிக்குள் இழுத்துச் செல்லப்படுவோம் என்று தெரியாதவர் அல்லர் அவர்..

ஆக, மொத்தத்தில் தமிழ்நாடு பாழாகிக் கொண்டிருக்கிறது.. மாநிலங்கள் தங்களின் அடையாளங்களை இழந்து அழிந்து கொண்டு வருகின்றன..

எந்த வகைச் சமரச இணக்கப் போக்கிற்கும் இடம் கொடுக்காமல் கொள்கை அளவிலும் நடைமுறை அளவிலும் உறுதி வாய்ந்த இளைஞர்களைக் கொண்ட இயக்கங்களே இனி, இதற்கான மாற்றங்களை உருவாக்கிட வேண்டும்..

பறிக்கப்பட்டிருக்கிற மாநில உரிமைகளை எதிர்த்து.. முற்றதிகாரத் தமிழ்நாட்டை உருவாக்குவதற்கு இளைய தலைமுறையினர் எழுச்சி பெற்றாக வேண்டும்..

2018 இல் திருச்சியை உலுக்கிய கருஞ்சட்டைப் பேரணியின் எழுச்சி போல் பெரியாரிய, அம்பேத்கரிய, மார்க்சிய, தமிழ்த் தேசியக் கொள்கை கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கக் கூடிய மக்கள் தமிழ்த் தேசத்தைப் படைக்கும் நோக்குடைய முன்னணிகள் பேரெழுச்சியுடன் உருவாக்கப்பட வேண்டும்..

வாருங்கள் தோழர்களே அத்தகைய உணர்வுடைய அனைவரும் அணி சேர்வோம்!

- பொழிலன்

தோழர் தமிழரசன் உள்ளிட்ட தமிழ்நாடு விடுதலைப் படைத் தலைமைத் தோழர்களுக்கும் மற்றும் அப்பு, பாலன் உள்ளிட்ட செப்டம்பர் ஈகியர் தோழர்களுக்கும் வீரவணக்கங்கள்...

மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு என்பது தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் வெகுமக்கள் பரப்பலுக்கான ஒரு முழக்கம்.

இன்றைய அரசியல் சூழலில் மிகவும் தேவையான முழக்கமாகவும் இருக்கிறது. மாநிலங்களின் அடையாளங்களையே அழித்திடும் நோக்கில் சூழ்ச்சியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்திய அரசின் செயல்பாடுகளை எதிர்த்தே இந்த முழக்கம் தேவையானதாகிறது.

மாநிலங்களின் அடையாளங்களைத் தற்காத்துக் கொள்வதும், பறிக்கப்பட்டிருக்கிற மாநில உரிமைகளை, சூறையாடப்படுகிற மாநிலங்களின் பொருளியல் வளங்களை மீட்டுப் பெறுகிற நோக்கத்தை வலுப்படுத்துவதான முழக்கமாகவே இந்த முழக்கம் அமைகிறது.

அதேபோது, அதுதான் அனைத்து அடக்குமுறைகளையும் தீர்ப்பதற்கான முழுமையான ஒரே தீர்வுக்குரிய முழக்கம் என்று நாம் சொல்லவில்லை.

மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பை முன்னிறுத்திப் பரப்புவதன் வழி மாநில உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்க்க வேண்டும் என்கிற கருத்தை வெகுமக்களிடையே ஊன்றிட முடியும்.

மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்க்கும் போது, மாநிலங்களுக்கு முற்றதிகாரங்கள் தேவை என்பது இயல்பாகவே இலக்காக மாறுகிறது..

மாநிலங்களின் முற்றதிகாரத் தேவை என்பது, தமிழ்த் தேசிய விடுதலை அரசியலுக்கு வழித்தடமாகவும் அமைகிறது. மாறாகத் தமிழ்த் தேசிய விடுதலை உரிமை அரசியலை மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்போடு நிறுத்துவது என்கிற வகையில் புரிந்து கொள்வதும் கருத்தறிவிப்பதும், கொள்கை இலக்கு அரசியலை வெகு மக்கள் அரசியலாக மாற்றுகிற முழக்கங்கள் பற்றித் தெரியாத தன்மையையே காட்டும்..

நாம் அடைய வேண்டிய இலக்கு நோக்கிப் பல முழக்கங்களைப் பல கோணங்களில் முன்னிறுத்துகிறோம்..அவ்வப்போது நம்மால் முன்வைக்கப்பெறும் ஒரு முழக்கமே நம் இலக்காகிவிடாது..

அதேபோது, ஒவ்வொரு முழக்கமும் இலக்கிற்கு எதிரானதும் அன்று.. இலக்கை நோக்கிச் செல்வதற்கு ஒவ்வொரு முழக்கமும் ஒவ்வொரு வகையில் முதன்மையானதே.

ஒரே ஒரு முழக்கத்தை மட்டும் வைத்துக்கொண்டு, இவ்வளவுதானா உங்களின் இலக்கு என்பது அரைகுறைப் பார்வையுடையதே.

இந்நிலையில், தமிழக மக்கள் முன்னணி முன் வைத்திருக்கிற மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு என்பது என்ன வகையில் எல்லாம் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதை விளக்கப்படுத்துகிறது..

அத்தகைய மாநில உரிமைப் பறிப்பை எதிர்த்ததான மாநில உரிமை மீட்பு அளவிலான அடையாளமாக நாம் ஏற்கனவே முன் வைத்துப் போராடி வருகிற முற்றதிகாரத் தமிழ்நாட்டின் வடிவம் எத்தகையது என்பதையும் பல நிலைகளில் விளக்கி இருக்கிறோம்..

அந்நிலையில் தமிழ்நாடு எனும் இன்றைய நிலையிலான மாநிலம் என்னென்ன வகையில் எல்லாம் நம்மிடம் இருந்த உரிமைகளைப் பறி கொடுத்திருக்கிறது என்பதை மக்களிடம் விளக்கப்படுத்த வேண்டியுள்ளது. இந்திய அரசு பறித்துக்கொண்டிருக்கிற நம் உரிமைகளைத் தடுத்து நிறுத்தி, தமிழ்நாட்டைக் காக்கவும், மீட்கவும் வேண்டியிருக்கிற விளக்கமே இவ்வெளியீடு.

முதலில் மாநில உரிமைகளாக இந்திய அரசு எவற்றையெல்லாம் சட்டத்தின் வழி அளித்திருக்கிறது, எவற்றையெல்லாம் பறித்திருக்கிறது என்று அறிய வேண்டியிருக்கிறது. எனவே, அவை முதலில் துறைவாரியாகப் பட்டியலிடப்பட்டிருக்கிறது.

அடுத்து, மாநில உரிமைப் பறிப்பை எதிர்த்து நாம் மீட்க வேண்டிய முற்றதிகாரத் தமிழ்நாட்டு உரிமைகள் எவையெல்லாம் என்கிற விளக்கம் தரப்பெறுகிறது.

அதையடுத்து, இவ்வெளியீட்டில் மாநில உரிமைப்பறிப்பு எதிர்ப்பு மாநாட்டின் அறிக்கையும், நிகழ்ச்சி நிரலும், தீர்மானங்களும் உள்ளன.

எனவே, இச்சிறு வெளியீடு, மாநில உரிமைப்பறிப்பு, முற்றதிகாரத் தமிழ்நாட்டின் அமைப்பு குறித்தான கையேடாக அனைவருக்கும் பயன்படும்.

அரசியல் வழி மாநிலங்களின் அதிகாரப் பறிப்புகள்..

இந்திய அரசு என்பது மாநிலங்களின் கூட்டாட்சியா? மாநிலங்களின் ஒன்றியமா? என்று பார்க்கிறபோது, இந்திய அரசுக்கு மாநிலங்கள் கீழ்ப்பட்டவையா? மாநிலத்தின் அரசுக்கு அந்த மாநிலம்கூட அதிகாரத்திற்குரியதாகக் கிடையாதா? என்ற கேள்வி விளக்கங்கள் தெரியவரும்.

மிகுந்த போராட்டங்களுக்குப் பின்னர் 1956 -இல் மொழிவழி மாநிலங்கள் இந்திய அரசின் அதிகாரத்திலிருந்து மீட்டு அடையாளப்படுத்தப்பட்டன. கி.பி. 1600-க்குப் பின்னர் பிரித்தானிய ஆங்கிலேய அரசு அதிகாரத்தால் தமிழ்நாடு உள்ளிட்டுப் பல மொழி இனத் தேசங்கள் இந்தியா என்கிற வல்லாட்சிக்குள் அடக்கப்பட்டுப் பின்னர் நடந்த உரிமை மீட்புப் போராட்டங்களின் விளைவாலேயே 1956 - இல் இறுதியாகத் தமிழ்நாடு - மாநிலமாகக் கிடைத்தது. கிடைத்த தமிழ்நாடு மாநிலமும் எண்ணற்ற தம் நிலப்பகுதிகளை இழந்தே கிடைத்தது. அது மட்டுமன்றி அரசியல், பொருளியல், வரலாற்றியல், பண்பாட்டு நிலைகளிலான எல்லா அதிகாரங்களையும் இழந்த நிலையிலேயே தமிழ்நாட்டை மீட்க முடிந்தது. தமிழ்நாடு - எனும் பெயரைக்கூட மிகப்பெருமளவில் போராடியே பெற முடிந்தது. அந்த நிலையில் பெறப்பட்ட தமிழ்நாடும் பிற மாநிலங்களும் இந்திய அரசியல் சட்ட அதிகாரத்தால் எந்த வகையிலெல்லாம் வஞ்சிக்கப்படுகின்றன என்பது ஓரளவு முழுமையாகக் கீழே தரப்பெறுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 3ஆவது பிரிவை எடுத்துக் கொண்டால் போராடிப் பெறப்பட்ட மாநிலங்களையே சிதைக்கவும் பிரிக்கவும் இந்திய அரசு அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது.

அதன்படி நாடாளுமன்றம் ஒரு சட்டம் இயற்றி,

(அ) ஒரு மாநிலத்திலிருந்து கொஞ்சம் பகுதிகளை எடுத்தோ, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் பகுதிகளை இணைத்தோ ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கலாம்..

(ஆ) ஒரு மாநிலத்தின் பரப்பளவை விரிவாக்கலாம்; அல்லது

(இ) குறைக்கலாம்.

(ஈ) எந்த மாநிலத்தின் எல்லையையும் மாற்றி அமைக்கலாம்.

(உ) எந்த மாநிலத்தின் பெயரையும் மாற்றலாம்.

இந்திய அரசு விரும்பினால் நாடாளுமன்றத்தில் வேறொரு சட்டத்தைக் கொண்டுவந்து, முன்பு நிறைவேற்றப்பட்ட மாநிலச் சட்டத்தைத் திருத்தவோ, செல்லுபடியாகாமல் செய்யவோ முடியும்.

அந்தவகையில் 2019 - ஆண்டு, ஆகத்து 5 - ஆம் நாள் காசுமீரம் மாநிலம் இந்திய அரசால் சிதைக்கப்பட்டு மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. அதையொட்டிவந்த எதிர்ப்புகள் அனைத்தையும் தன் அதிகாரப்படையால் அடக்கி ஒடுக்கிவிட்டது இந்திய அரசு. அதைச் சட்ட வழியில் சரி செய்யவும் காசுமீரத்தால் முடியவில்லை.

தமிழ்நாடோ, கேரளமோ, மணிப்பூரோ, மிசோராமோ, காசுமீரமோ, பஞ்சாப்போ - என எந்தத் தனிமாநிலமும் தன் தேசிய இனத்தின் உரிமைத் தேவையை இந்திய நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமாக இயற்றி மீட்டுக்கொள்ள முடியாது. எந்த இனத்தின் உரிமைக் குரலும் தனியே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றிருக்கவில்லை. இந்திச் சார்பு மாநிலங்களின் எண்ணிக்கையே பெரும்பான்மை இருப்பதால் பிற மொழித் தேச மாநிலங்கள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பலாமே அல்லாமல் தங்களுக்கான தேவையைச் சட்டமாக்கிக் கொள்ள முடியாது.

★ ★ ★

ஒவ்வொரு துறைசார்ந்த அதிகாரங்களும் மாநில(ங்களுக்குரிய உரிமை)ப் பட்டியல், இந்திய அரசு(க்கு உரிய உரிமை)ப் பட்டியல், இவை இரண்டுக்கும் பொதுவான (உரிமைக்குரிய) பட்டியல் என மூன்று நிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பொதுப் பட்டியல் - என்பது மறைமுகமான 'இந்திய அரசின் அதிகாரப் பட்டியலாகவே இருப்பதைப் பார்க்கலாம். இப்படிப் பொதுப் பட்டியல் - என்பது முழுக்க முழுக்க இந்திய அரசின் அதாவது, இந்திய அரசை ஆளுகிற கட்சியின் - கட்டுப்பாட்டில் இருக்கிற பட்டியலாகும்!

அந்தப் பட்டியலின் அளவிலேயே அதிகாரங்களைப் பெற்றிருக்கிற மாநிலங்கள் தமக்காக ஏதும் சட்டம் இயற்றும்போது குடியரசுத் தலைவரின் கையெழுத்தைப் பெற்றால் மட்டுமே அதைச் சட்டமாக்கும் அதிகாரம் கிடைக்கும்.

ஆனால், குடியரசுத் தலைவர் என்பவர் யார்? இந்திய அரசின் நிகராளிதானே! இந்திய அரசு கையெழுத்துப் போடச் சொன்னால் உடனே அவர் கையெழுத்துப் போடுவார்!

1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் 'கல்வி' முழுவதும் 'மாநில'ப் பட்டியலில் இருந்தது. ஆனால், அதிகார வரையறைக் கூட்டத்தில் மௌலானா அபுல்கலாம் ஆசாத் இதைக் கடுமையாக எதிர்த்தார்; "கல்வித்துறை இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும், கண்காணிப்பில் இருக்கவேண்டும்'' என்று தருக்கமிட்டனர். அப்போது அவர் நாட்டின் கல்வி அமைச்சராக இருந்தவர். அதன் விளைவாக, நாட்டுக்கு முதன்மை வாய்ந்தவை என்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள், இந்திய அரசே தனது செலவில் சிறப்புக் கல்விக்காகத் தொடங்குகிற நிறுவனங்கள், உயர் கல்வி அல்லது ஆராய்ச்சியில் ஒருமைப்பாட்டையும் தரத்தையும் உருவாக்குதல் போன்ற கல்வித்துறையின் சில அதிகாரங்கள் எனப் பல இந்திய அரசின் பட்டியலுக்கு மாற்றப்பட்டன.

★ ★ ★

மாநில அரசில் ஒரு சட்டமுன் வரைவை (மசோதாவை)ச் சட்ட மன்றம் நிறைவேற்றினால் மட்டுமே அது தானாகச் சட்டமாக ஆகிவிடுவது இல்லை. ஆளுநரின் கையெழுத்து அதில் இடம் பெற்றால்தான் அது சட்டமாக ஆகும். இது குறித்து ஆளுநருக்குக் கீழ்க்காணும் அதிகாரங்கள் இருக்கின்றன:

(அ) அந்தச் சட்ட முன் வரை(மசோதா)வில் தம்முடைய ஒப்புதலைத் தெரிவித்து ஆளுநர் கையெழுத்துப் போடலாம். அப்படிப் போட்டால், அந்தச் சட்ட முன் வரைவு (மசோதா) சட்டமாக ஆகிவிடுகிறது.

(ஆ) கையெழுத்திடாமல், 'போட முடியாது' என்றும் அறிவித்து விடலாம். அப்படியானால் அந்த 'மசோதா' சட்டமாகாமல் போய்விடும்.

(இ) அது நிதி பற்றிய முன் வரைவாக இல்லாமல் வேறு முன்வரைவாக இருந்தால், ஆளுநர் கையெழுத்துப் போட மறுத்தும் அந்த முன் வரைவு திரும்பவும் சட்டமன்றத்திற்குப் போகும். அங்கே திருத்தத்துடனோ, திருத்தம் இல்லாமலோ மறுபடியும் நிறைவேற்றப்பட்டால்; ஆளுநர் அதில் கையெழுத்துப்போட மறுக்கமுடியாது. எனவே, கட்டாயமாக ஆளுநருடைய கையெழுத்தைப் பெற்று அந்தச் சட்ட முன்வரைவு சட்டமாக ஆக முடியும். ஆனால், இந்த அதிகாரங்கள் காரணமாக மாநிலத்துச் சட்டமன்றம் நிறைவேற்றுகிற ஒரு சட்ட முன்வரைவை ஆளுநர் கொஞ்ச நாள்களுக்குத் தடுத்து நிறுத்தி வைக்க முடியும்.

(ஈ) மேற்கண்ட முறைகளைக் கையாளாமல் ஆளுநர் "நான் குடியரசுத் தலைவரின் கையெழுத்திற்காக இந்தச் சட்டமுன் வரைவை அனுப்பியிருக்கிறேன்" என்று கூறிவிடலாம். அதன் பிறகு அந்தச் சட்ட முன்வரைவு தில்லிக்குப் போகிறது. குடியரசுத் தலைவர் கையெழுத்துப் போட்ட பிறகுதான் அந்தச் சட்ட முன்வரைவுச் சட்டமாக முடியும். குடியரசுத் தலைவரும் அதில் கையெழுத்துப் போடவேண்டும் என்கிற கட்டாயம் கிடையாது. அதாவது அவர் கையெழுத்தும் போடலாம்; போடாமல் ஆளுநருக்கே அதை அனுப்பி அதைச் சட்டசபைக்கே மறுபடியும் அனுப்பி மறுஆய்வு செய்யச் சொல்லியும் ஆணையிடலாம். அப்படிச் செய்தால் ஆறுமாதத்திற்குள் சட்டமன்றம் அதை மறுபடியும் திருத்தத்தோடோ அல்லது திருத்தம் இல்லாமலோ நிறைவேற்றிக் குடியரசுத் தலைவருக்குத் திரும்பவும் அனுப்ப வேண்டும்.

(உ) இதன்பிறகாவது குடியரசுத் தலைவர் சட்டமன்றத்தை மதித்து, அதில் கையெழுத்துப் போட்டு அதைச் சட்டமாக்கவேண்டும் என்று ஏதாவது கட்டாயம் இருக்கிறதா? என்றால் கிடையாது.

(ஊ) கடைசி மூன்று நிலைகளையும் செய்யாமல், சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பி வைத்த திட்ட முன்வரைவை ஆளுநர், ஆளுநர் மாளிகையிலேயே வைத்துக் கொள்ளமுடியும். கையெழுத்துப் போடுதல்; கையெழுத்துப் போட மறுத்தல்; குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்பிவைத்தல் - இந்த மூன்றில் எதைச் செய்கிறேன் என்று சொல்லாமலேயே ஆளுநர் அந்த முன் வரைவைக் காலவரம்பின்றிக் கிடப்பிலே போட்டு வைத்திருக்கலாம்.

அப்படி அவர் ஆளுநர் மாளிகையிலேயே அந்தச் சட்ட முன் வரைவை வைத்திருந்தால், அவரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், இந்த மூன்றில் ஏதாவதொன்றைச் செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது.



சட்டமன்றத்தின் வாழ்வு ஐந்தாண்டுகள்தாம். அந்த ஐந்தாண்டுகளுக்குள் ஆளுநரோ, குடியரசுத் தலைவரோ நினைத்தால் அந்தச் சட்டமுன்வரை(மசோதா)வைச் சட்டமாக்காமலேயே வைத்திருக்கமுடியும்.

இப்படி ஆளுநரும், குடியரசுத் தலைவரும் ஒரு மாநிலச் சட்டப் பேரவை நிறைவேற்றுகிற சட்ட முன் வரைவைத் தடைசெய்கிற ('வீட்டோ' - Veto) அதிகாரம் பெற்றிருக்கின்றனர்.

கூட்டாட்சித் தத்துவத்தை முதுகில் குத்திச் சாய்க்கும் நடவடிக்கை இதைவிட வேறு என்ன இருக்க முடியும்?

ஆளுநர் என்கிற அமைப்பு முறையே மாநில அதிகாரங்களைப் பறிப்பதே!

ஆளுநர் என்கிற அதிகார அமைப்பு முறையே மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கிற பொறுப்புடையதே..

ஆங்கிலேய அரசு இந்தியாவை உருவாக்கிய போது 1652 இல் கொண்டுவரப்பட்டதே ஆளுநர் அமைப்பு முறை.. 1947 க்கு முன்பு சென்னைத் தலைமாநில(மாகாண)த்தில் 85 ஆங்கிலேயர் ஆளுநர்கள்களாக அதிகாரத்தில் இருந்தனர்..

அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் பெயர்களிலேயே ஊர்களை, பல நிறுவனங்களை, மருத்துவமனைகளை, பூங்காக்களை அமைத்துக் கொண்டனர்.. அவையெல்லாம் இன்னமும் அப்படியே உள்ளன.

இன்று வரை 26 ஆளுநர்கள் தமிழ்நாட்டை ஆண்டிருக்கின்றனர். ஆங்கில ஆளுநர்கள் என்னென்ன செய்தார்களோ அதை விடவும் அதிகமான அதிகாரப் போக்கில் இவர்கள் செயல்பட்டு வருகின்றனர். தமிழ்நாட்டினர் அல்லாத பிற மாநிலங்களைச் சார்ந்தவர்களையே ஆளுநர்களாக அமர்த்துகின்றனர்..

சென்னையில் ஒன்றும், உதகையில் ஒன்றும் ஆக இரண்டு ஆளுநர் மாளிகைகளை ஆங்கிலேயர் தங்கள் ஏற்துக்காக அமைத்துக் கொண்டதிலேயே இவர்களும் வளமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கான ஊதியம் உள்ளிட்ட அனைத்துச் செலவுகளையும், ஆயிரக் கணக்கான அவர்களின் பணியாளர்களுக்கான செலவுகளையும் எனப் பல ஆயிரம் கோடிகளைத் தமிழ்நாடு அரசே கொட்டி அழுதாக வேண்டியுள்ளது.

மாநில அரசின் கீழ் இருக்கும் அதிகார வரம்புகள்:

- சட்டம் ஒழுங்கு (இந்திய கப்பற்படை, வான்படை அல்லாது) என்று சொன்னாலும் புதிதாகத் தேவை அடிப்படையில் சட்டத்தை மாநில அரசே ஏற்றுக் கொள்ள முடியாது. அதேபோல் குற்றங்களைச் செய்வோரை வழக்கு மன்றத்தில் முன்னீடு செய்கிற பொழுது மாநில அரசே முழு அதிகாரத்தைக் கொண்டதாக இருக்க முடிவதில்லை. மாநில அரசுகளின் உயர்நீதிமன்றங்களைக் கடந்து இந்திய அரசின் உச்ச நீதிமன்றம் அனைத்தையும் கட்டுப்படுத்துகிற அதிகாரம் கொண்டதாக இருக்கிறது.

அஃதாவது பிரிட்டீசு ஆட்சியின் போது எப்படி, பிரிவிகவுன்சில் என்கிற நீதித்துறையின் இறுதி அதிகாரம் இலண்டனில் இருந்ததோ, அப்படி 1949 - இல் தில்லியில் உச்சநெறி மன்றம் தொடங்கப்பட்டதிலிருந்து நீதித்துறையின் இறுதி இடம் தில்லியில் உள்ள உச்சநெறி மன்றமாகவே

ஆனது. ஆக, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆன - நீதித்துறையின் இறுதி அதிகாரம் அந்த மாநிலத்தில் இல்லாத வகையில், இந்திய உச்சநீதிமன்றம் தான் தீர்மானிக்கும் என்ற நிலையில் அதிகாரம் செலுத்துகிறது. அதன்வழி - சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் பெயரைக்கூட இன்றுவரை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என மாற்ற முடியவில்லை மெட்ராஸ் ஐகோர்ட் என்றே உள்ளது. தமிழ்நாடு அரசின் இலச்சினையில் தமிழ்நாட்டு அரசால் வாய்மையே வெல்லும் - என்று மாற்றப்பட்ட பிறகு கூட அதையே உயர் நீதி மன்றத்தின் இலச்சினைகளில் சத்யமேவே ஜயதே - என்றே இருக்கிறது. உயர் நீதிமன்ற மொழியாகத் தமிழைக் கொண்டு வர முடியவில்லை.

● காவல்துறை என்பது தமிழ்நாட்டு அரசு அதிகாரத்திற்கு உட்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் காவல்துறையின் தலைவரை இந்திய அரசே தேர்வு செய்கிறது. காவல்துறை உயர் அதிகாரிகளை அடிக்கடி தில்லிக்கு வரவழைப்பதும் அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பது என்கிற பெயரில் கட்டுப்படுத்துவதுமான நடைமுறையையே வைத்திருக்கிறது இந்திய அரசு..

இந்திய ஆட்சிப் பணி (ஐஏஎஸ்) இந்தியக் காவல் பணி (ஐபிஎஸ்) தேர்வுகளை நடத்துவதும் தேர்வு செய்வதும் இந்திய அரசாகவே இருக்கிறது.

● என். ஐ. ஏ. என்கிற பெயரில் ஒரு மாநிலத்திற்குள் அந்த மாநில அரசின் இசைவில்லாமலேயே இந்திய அரசு நுழைவதும், நுழைந்து யாரையும் சிறைப்படுத்துவதுமான நடைமுறைகள் மாநில அதிகாரங்களையே நசுக்குகிற தன்மையுடையது.

● வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் தமிழ்நாட்டு அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. தொல்லியல் தேவைக்கு என்று பல பெருங் கோயில்களை இந்திய அரசே தன் கையகப்படுத்தி இருக்கிறது. தஞ்சை பெரிய கோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், தாராசுபுரம் கோயில், மாமல்லபுரம் பஞ்சபாண்டவரதங்கள், காஞ்சிபுரம் கைலாயநாதர் கோயில் உள்ள கோயில்களைத் தன் கவனிப்புப் பொறுப்பில் வைத்துள்ளது. பெரும்பாலான கோயில்களின் குடமுழுக்குகளைப் பார்ப்பனிய அதிகார வகுப்பே ஆளுமை செய்கின்றது

பொருளியல் வழி மாநிலங்களின் உரிமைப் பறிப்புகள்..

● சாலைத் தொடர்பு (சாலை, பாலங்கள், படகு செல்கை, இழுவை ஊர்தி, உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்து) எல்லாம் மாநில அரசுக்கு உரியவை என்றெல்லாம் சொல்லப்பட்டாலும் நெடுஞ்சாலைத் துறையை முழுக்க முழுக்க இந்திய அரசே தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அவற்றில் சுங்கச்சாவடிகளை அமைத்திருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் சுங்கச்சாவடிகள் 78-க்கும் மேற்பட்டவை உள்ளன. அவற்றின் வழி மட்டுமே ஆண்டுக்கு ஐயாயிரம் கோடி ரூபாய் அளவில் இந்திய அரசு வழிப்பறிக் கொள்ளை அடிக்கிறது.

◆ உழவு. உழவு ஆராய்ச்சி மற்றும் படிப்பு, பூச்சிக் கொல்லி மற்றும் நோய்த் தடுப்பு உள்ளிட்டவை மாநில அரசுக்கு உரியவையாகச் சொல்லப்பட்டாலும், நெல், கரும்பு உள்ளிட்டவற்றிற்கு இந்திய அரசே விலை உறுதி செய்வதும், வீரிய வித்துகள், வேதியியல் உரங்கள் உள்ளிட்ட எல்லாவற்றையும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்துத் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் இயற்கை வேளாண்மையைப் பெருமளவில் நசுக்கி வந்திருக்கிறது இந்திய அரசு..

● கனிமவளம் (ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின் கீழ்) மாநில அரசுக்கு உரிமை என்று பொய்யுரைக்கப்படுகிறது. நரிமணம் கோயில் களப்பால் வழியான கன்னெய்(பெட்ரோல்) எடுத்தல், நெய்வேலி நிலக்கரியை 1956 முதல் சுரண்டிச் சென்றது, சேலம் இரும்பை முழுக்க முழுக்க மாநில அரசுக்குப் பங்குகூட கொடுக்காமல் சுரண்டிச் செல்வது, காவிரி கடைமடைப் பகுதியில் ஐட்ரோ கார்பன் திட்டத்தை ஓஎன்ஜிசி நிறுவனம் வழிச் சூறையாடி வருவது உள்ளிட்டவை அனைத்தும் இந்திய அரசின் சூழ்ச்சியால் நடைபெற்று வருபவையே. இவ்வகையில் எல்லாம் தமிழ்நாடு இந்திய அரசால் கடுமையாகச் சூறையாடப்பட்டு வருகிறது.

● வணிக வரிகள் ஜி. எஸ். டி. என்கிற பெயரில் மிகுதியான விழுக்காட்டில் சூறையாடிச் செல்கிறது இந்திய அரசு. ஒரு மாதத்தில் பல ஆயிரம் கோடிகளை மாநிலங்களிடமிருந்தும், வெகுமக்களிட மிருந்தும் கொள்ளையடித்துச் செல்வதோடு, அதை மாநிலங்களுக்கும் முறையாகத் திருப்பித் தர மறுக்கிறது.

● தொழிற்துறை மாநிலங்களுக்கு உரிமை உடையதாகவே சொல்லப்படுகிறது. கல்வித் துறை போலவே தொழில்துறையிலும் மாநில அரசுக்கு உட்பட்டது, இந்திய அரசுக்கு உட்பட்டது, இரண்டுக்கும் பொதுவானது என்று பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றை முழுமையாக இந்திய அரசு சூழ்ச்சியாகத் தன் அதிகாரத்தின் வழிமட்டுமே கையாளுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளங்களை யெல்லாம் சூறையாடிவருகிறது.

1948 இன் இந்திய அரசின் தொழிற்சாலைகள் சட்டத்தின்படி, ஒரு தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான கட்டட வரைபட அனுமதி, சுற்றுச்சூழல் சான்றிதழ் மற்றும் செயல்பாட்டு உரிமம் (License) வழங்கும் அதிகாரம் மாநில அரசின் முதன்மை ஆய்வாளரிடமே உள்ளது.

நில ஒதுக்கீடு மற்றும் உள்கட்டமைப்பு: தொழிற்சாலைக்கான நிலத்தை கையகப்படுத்துதல், தொழிற்பேட்டைகளை (சான்றாகத் தமிழ்நாட்டின் (SIPCOT) உருவாக்குதல், மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புகளை வழங்குதல் ஆகியவை மாநிலங்களின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்குள் வருகின்றன.

தொழிலாளர் நலன் மற்றும் விதிகளை உருவாக்குதல்: வேலை நேரம்,



பணியாளர் பாதுகாப்பு, துப்புரவு மற்றும் பெண்களுக்கு உகந்த பணிச் சூழல் போன்றவற்றுக்கான நெறிகளை மாநில அரசு இயற்றலாம். தேவைப்படின், உள்ளூர் சூழலுக்கு ஏற்ப இந்திய அரசமைப்புச் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவரவும் மாநிலங்களுக்கு உரிமை உண்டு.

ஆய்வு மற்றும் கண்காணிப்பு: தொழிற்சாலைகள் பாதுகாப்பு நெறிகளை முறையாகப் பின்பற்றுகின்றனவா என்பதைக் கண்காணிக்க ஆய்வாளர்களை (Inspectors) அமர்த்தும் அதிகாரம் மாநில அரசுக்கு மட்டுமே உரியது.

இந்தியப் பாதுகாப்பு, பொதுத் தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பின்வரும் 5 குறிப்பிட்ட துறைகளில் தொழிற்சாலை தொடங்க இந்திய அரசின் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வணிக மேம்பாட்டுத் துறையின் (DPIIT) கட்டாய உரிமம் பெற வேண்டும்:

1) மதுபானங்கள் தயாரித்தல் (Distillation and brewing of alcoholic drinks).

2) புகையிலை, சிகரெட் மற்றும் அதன் மாற்றுப் பொருட்கள்.

3) மின்னணு விண்வெளி மற்றும் பாதுகாப்புக் கருவிகள் (Electronic aerospace and defence equipment).

4) துப்பாக்கி வெடிமருந்துகள், வெடிபொருட்கள் மற்றும் தீப்பெட்டித் தயாரிப்பு. குறிப்பிட்ட அஞ்சத்தகும் வேதிப்பொருள்கள் (Hazardous chemicals)

5) பொதுத்துறைக்கான சிறப்பு ஒதுக்கீடு அணுசக்தி (Atomic Energy) மற்றும் தொடர்வண்டிப் போக்குவரத்து (Railway Transport) ஆகிய துறைகளில் தனியார் தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி இல்லை. இவை இந்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் மட்டுமே இயங்க முடியும். -என்றெல்லாம் இந்திய அரசு வகைப்படுத்தி இருக்கிறது..

மேம்போக்காக இவ்வாறெல்லாம் மாநில அரசுக்கு உரிமை இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், மாநில அரசு அதிகாரத்தின் கீழ் இருக்கிற சிறு முதலாளிகளை, அந்த மாநிலத் தேசிய முதலாளிகளை ஒடுக்குகிற வகையில் மார்வாடிப் பெருமுதலாளிகளையும், பன்னாட்டுப் பெரு முதலாளிய நிறுவனங்களையுமே இந்திய அரசு வளர்க்கிறது, வாழ்விக்கிறது. திருப்பூர்,

சிவகாசி, கோவை உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் மார்வாடிப் பெரு முதலாளிகளை நல்கை கொடுத்து வளர்த்து, அங்குள்ள சிறு முதலாளிய வளர்ச்சியையே நசுக்கி அழிக்கிறது.

மேலும், கனிம வளச் சுரங்கங்களைத் தனியாருக்குத் தாரை வார்க்கிறது இந்திய அரசு.. வானியல் ஆய்வுகளை, வான்வெளியில் செயற்கைக்கோள்களை அனுப்பி ஆய்வு செய்கிற முறைகளைத் தனியார்ப் பெரு முதலாளிகளுக்குத் தாரை வார்த்திருக்கிறது இந்திய அரசு அதன்வழி பன்னூற்றுக்கணக்கான அறிவியல் அறிஞர்கள் அரசின் (ஐ எசு ஆர்ஓ-வின்) துறையிலிருந்து விலகித் தனியார்த் துறையில் சேர்கின்றனர். அந்த வகையில் தனியார் பெருமுதலாளிகளை வளர்க்கிற இந்திய அரசு, மாநில அரசுகளை ஏற்பதில்லை; வளர்ப்பதில்லை. அவற்றுக்கு உரிமை தருவதில்லை... அதேபோல் தொடர்வண்டித் துறையை, வானூர்தியைத் தனியார் பெருமுதலாளிகளுக்குத் தாரை வார்க்கிறது.. படைத் துறையிலேயேகூட மிகக் கமுக்கமான பிரிவுகள்கூடத் தனியார் பெரும் முதலாளிகளுக்குத் தாரைவார்க்கப்படுகிறது.. இவ்வளவு நிலைகளையும் தனியாருக்குத் தாரை வார்க்கிற இந்திய அரசு மாநிலங்களுக்குக் கொடுப்பதற்கு தடை செய்கிறது.. மாநிலங்கள் அந்த அதிகாரங்களைப் பெறக் கூடாது என்று கட்டுப்படுத்தி வைக்கிறது..

கல்வி அடிப்படையிலும் பண்பாட்டடிப்படையிலும் பறிக்கப்படும் உரிமைகள் :

● இந்தியத் துணைக்கண்டம், ஆங்கிலேயர்களால் ஆளப்பட்ட 1919 காலகட்டத்தில் மாண்டேகு - செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் உருவாக்கப்பட்டன. அதில் கல்வி என்பது ஓரளவு மாகாண அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது.

● தொடர்ந்து 1935 காலகட்டத்தில் இயற்றப்பட்ட (Govt of India Act) சட்டப்படி கல்வி, முழுமையாக மாகாண அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. பள்ளி, கல்லூரிகளின் கல்வி, அவற்றின் பாடத்திட்டம், ஆசிரியர் பயிற்சி, கல்வி நிர்வாகம் என அனைத்தும் மாகாண அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

● இந்திய விடுதலைக்கு முன், காங்கிரஸ் கட்சி நிறைய வாக்குறுதிகளை அளித்தது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், மாநில மொழிக்கு



அதிக முக்கியத்துவம் என்றெல்லாம் உறுதி கொடுத்தது காங்கிரஸ். ஆனால், விடுதலைக்குப் பிறகு அனைத்தும் காற்றில் விடப்பட்டன. அதிகாரங்கள் மென்மேலும் மையத்திலேயே குவிக்கப்பட்டன.

● விடுதலைக்குப் பிறகு ஒன்றிய அரசுப் பட்டியல் (Union List) பொதுப் பட்டியல் அல்லது ஒத்திசைவுப் பட்டியல் (Concurrent List) மாநிலப் பட்டியல் (State List) என்பதாக ஒன்றிய அரசின் சட்டங்கள் பிரிக்கப் பட்டன. இத்தகைய ஏற்பாடு, பல மாற்றங்களுக்குப் பிறகு. ஒன்றிய அரசுப் பட்டியலில் 100, ஒத்திசைவுப் பட்டியலில் 52, மாநில அரசுப் பட்டியலில் 61 என்பதாக அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

● இதில் ஒத்திசைவுப் பட்டியல் என்பது முகமூடி போட்ட ஒன்றியப் பட்டியல்தான். ஏனெனில் இதிலுள்ள அதிகாரங்களில் மாநில அரசை விட, ஒன்றிய அரசுக்கே இறுதி முடிவு எடுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டு உள்ளது. (அரசமைப்புச் சட்டப் பிரிவு 254) அதனால்தான் கல்வி ஒன்றியப் பட்டியலில் இருந்தாலும், இறுதியாகத் தீர்மானிக்கும் அதிகாரம் ஒன்றிய அரசிடம் உள்ளதால், நீட் - டை நம்மால் ஒழிக்க முடியவில்லை.

● 1976 நெருக்கடி நிலை நடைமுறையில் இருந்த பொழுது, தலைமை அமைச்சர் இந்திரா காந்தி மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை அரசமைப்புச் சட்டத்தின் 42 ஆவது திருத்தத்தின் மூலம் மிக எளிதாக ஒருத்திசைவுப் பட்டியலுக்கு மடைமாற்றிவிட்டார்.

● தொடர்ந்து எடுக்கப்பட்ட பல்வேறு மாற்றங்கள், மாநிலங்களின் கல்வி உரிமையை முற்றாகப் பறித்துவிட்டன.

எடுத்துக்காட்டாக, மாநிலங்களின் வரி வருவாயை ஜிஎஸ்டி மூலம் ஒன்றிய அரசு முற்றாகப் பறித்து விட்டதால், மாநிலங்கள் எப்பொழுதும் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி ஒன்றிய அரசின் கருணைக்காகக் காத்திருக்கும் கதி ஏற்பட்டுவிட்டது.

● பல்கலைக் கழக மானியக் குழு (UGC) தேசியக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் குழு (NCERT) அனைத்திந்தியக் தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) தேசிய மருத்துவ ஆணையம் (NMC) போன்ற படிநிலை அமைப்புகளை உருவாக்கிக் கல்வி அதிகாரத்தை மையப்படுத்தித் தன் கையில் வைத்துள்ளது ஒன்றிய அரசு. இவற்றின் மூலம் உயர் கல்வி, ஆசிரியர் கல்வி, தொழில்நுட்பக்கல்வி, கல்வித்தரம், நுழைவுத் தேர்வு, கல்வி நிலைய அங்கீகாரம் போன்றவற்றுக்கான அதிகாரம் முழுவதும் ஒன்றிய அரசிடம் குவிந்து கிடக்கிறது.

● தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரால் தொடர்ந்து ஒன்றிய அரசின் கொள்கைகள் மாநிலத்தில் திணிக்கப்படுகின்றன. 1986 மற்றும் 2020 - ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கைகள் மாநில உரிமைகளைப் பறிப்பதாகவே அமைந்தன.

● பல்வேறு தேசிய அளவிலான தேர்வுகள் மற்றும் மாணவர் சேர்க்கையில் மாநிலங்களுக்கான அதிகாரம் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது. 2020 கல்விக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசியத் தேர்வு முகமைதான் (National Testing Agency) நீட் தேர்வு உள்ளிட்ட அனைத்துத் தேர்வுகளையும் நடத்துகிறது. ஆனால் இதன் நடைமுறைச் செயல்பாடுகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. மேலும் அனைத்துத் தேர்வுகளையும் சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு ஏற்ற வகையில் இவ்வமைப்பில் நிரந்தரப் பணியாளர் என ஒருவர் கூட இல்லை என்பது அண்மையில் அம்பலமாகி விட்டது. இந்தப் பின்னணியில் மாநிலங்களின் அனைத்துத் தேர்வுகளையும் இதுதான் கட்டுப்படுத்துகிறது: மாநிலங்களுக்கு இது பாரதூரமான பாதிப்புகளை உண்டாக்கும்.

● இந்தியாவில் கல்வி சீரழிந்ததற்கான மையக் காரணத்தை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், சர்வதேச அரசியலைச் சற்று தெரிந்து கொள்ள வேண்டும். 1990 -க்குப் பிறகு, உலகமயம், தாராளமயம், தனியார்மயம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கை, அரசியல் மற்றும் பொருளாதார அரங்கில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது.. அதற்கு முன்பே காட்ஸ் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டிருந்தது. தவிரவும் 2015 - ஆம் ஆண்டு உலக வர்த்தகக் கழகத்தின் நைரோபி மாநாட்டில் உறுதியளித்தபடி காட்ஸ் ஒப்பந்தம் கோரிய சீர்திருத்தங்கள் இங்கு நிறைவேற்றப் படுகின்றன. உயர்கல்வியில் 100% அந்நிய முதலீடு, வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்குத் தாராள அனுமதி, அரசுப் பல்கலைக் கழகங்களைத் "தன்னாட்சி" நிறுவனங்களாக மாற்றி அமைத்தல், உயர்கல்வி, மாநிலத்தின் கட்டுப்பாட்டிலிருந்து மாற்றப்படுதல், பல்கலைக் கழகத்தின் மூலம் மாணவர் சேர்க்கையைத் தவிர்த்து, அதை ஒன்றிய அரசின் கைகளில் ஒப்படைத்தல் போன்ற நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டு, ஒன்றிய அரசின் அதிகாரம் மென் மேலும் இறுக்கப் படுகிறது.

● கல்வி என்பது பொதுச் சேவையோ அல்லது அடிப்படை உரிமையோ அல்ல. அது சந்தையில் விற்பனைக்கு வந்து விட்ட ஒரு பண்டம்" என்பது காட்ஸ் ஒப்பந்தத்தின் சாரமாகும். எனவே கல்வி என்பது சேவை (Service) என்ற நிலையிலிருந்து பண்டம் (Commodity) என்ற நிலைக்குக் கீழிறங்கி விட்டது. அதற்கேற்ப " கல்வி என்பது பணம் குவிக்கும் ஒரு துறையாக மாறிவிட்டதால், செல்வந்தர்கள் அதில் அதிக முதலீடுகளைச் செலுத்த வேண்டும். குறைந்த காலத்தில் அதிக இலாபத்தை இத்துறை தரும்" என உலக வங்கியின் அறிக்கையும் வழிகாட்டியது. எனவே பன்னாட்டு நிதியம், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் திசைவழியில், கல்வி வணிகமயமாதலுக்கு மலர்ப்பாதை அமைக்கப்பட்டது.

● இந்தப் பின்னணியில்தான் நீட் தேர்வின் வர்க்கச் சார்பு, மாநிலங்களின் உரிமைப் பறிப்பு மற்றும் கல்வி வணிகமயமானதன் கொடுமை ஆகிய எதிர்மறைத் தன்மைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். நீட் என்பது மாநில உரிமைகளை ஒழித்துக்கட்டும் ஒரு கொடிய நஞ்சாகும்.

● நீட் தேவை என்பதை முதன்முதலாக அரசிதழ் மூலம் ஓர் ஆணையாக இந்திய மருத்துவப் பேரவைதான் (Medical Council of India). வெளியிட்டது. இதற்குத் தடைகோரி திமுக அரசு உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. வேறு சில நிறுவனங்களும் வழக்குத் தொடுத்தன. இத்தகைய வழக்குகள் அனைத்தும் பிறகு உச்சநீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டன. அங்கு மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வில் இருவர்

2013 -ஆம் ஆண்டில் நீட் தேர்வு, சட்ட விரோதமானது எனத் தீர்ப்பளித்தனர். பிறகு 2014 மோடி அரசு பதவி ஏற்றவுடன் நீட் வழக்கு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டு, ஐந்து நீதிபதிகள் கொண்ட ஆயத்தில் நீட் தேர்வு தேவை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

● கல்வியின் மீதான மாநில உரிமைகளை ஒடுக்குவதில் ஆளுநரின் பங்கு மிகவும் அதிகம். நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரும் சட்டமன்றத் தீர்மானங்களை ஆளுநர் சங்கி ரவி மீண்டும் மீண்டும் திருப்பி அனுப்பினார். பிறகு அத்தீர்மானத்தைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்க, அது அங்கு நீண்ட காலமாகக் கிடந்தது. அது மட்டுமல்லாமல், பல்கலைக் கழகத் துணைவேந்தரைக் கண்டறியும் குழுவில் பல்கலைக் கழக நிதியத்தைச் சார்ந்த ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும் எனும் ஆளுநரின் பரிந்துரை தற்பொழுது ஏற்கப்பட்டு, மீண்டும் பல்கலைக் கழகங்களில் ஆளுநரின் அதிகாரம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

● நீட் தேர்வு, மாநில உரிமைக்கு மட்டும் எதிரானதல்ல! அது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது, சனநாயகத்திற்கு எதிரானது, மனித உரிமைகளுக்கு எதிரானது. இத்தேர்வு உயிர்ப்பலி வாங்கும் ஒரு பயங்கரவாத நடவடிக்கை ஆகும். நீட் தேர்வு காரணமாக இதுவரை இந்தியாவில் 107 மாணாக்கர்களும், தமிழகத்தில் 26 மாணாக்கர்களும் உயிரிழந்துள்ளனர். அண்மையில் நீட் வினாத்தாள் கசிந்ததால் கடைசி நிமிடத்தில் மறு தேர்வு அறிவிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக 22 பேர் தற்கொலை செய்து கொண்டனர் என்பது பெரும் சோகம்.

● அடுத்து நீட் தேர்வை ஊக்குவிக்கும் பயிற்சி வகுப்புகள், மாநிலத்தின் பொருளாதாரத்தையே சிதைக்கின்றன. தவிரவும் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் பயிற்சிக்காக ஆண்டுதோறும் ரூ 70,000 முதல் ரூபாய் 2,00,000 வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனால் இந்தியாவிலுள்ள பயிற்சி வகுப்புகள் ஓராண்டில் 20,000 முதல் 25,000 கோடி வரை இலாபமாகக் கொள்ளை அடிக்கின்றன, ஆண்டுக்கு ஆண்டு இந்த இலாபம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அரசு உயர்கல்விக்காகச் செய்யும் செலவை விட, பயிற்சி மாபியாக்கள் ஈட்டும் தொகை அதிகம் எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. தனியார் பயிற்சி நிறுவனங்கள் கொள்ளை அடிப்பது மட்டுமல்ல. தேசியக் கல்விக் கொள்கை 2020 பரிந்துரையின் அடிப்படையில் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தேர்வுகளைத் தேசியத் தேர்வு முகமை(NTA) நடத்துகிறது. இந்தத் தேர்வுப் பணிகளைத் தேசியத் தேர்வு முமைச் சார்பாகத் தனியார் நிறுவனம் மேற்கொள்கிறது. இந்தத் தேசியத் தேர்வு முகமையின் (NTA) செயல்பாடுகளை முன்னெடுக்கும் தனியார் அமைப்பு 2017-ல் தொடங்கப்பட்டது. 2018 முதல் 6.6 கோடி மாணவர்களுக்கு 270 தேர்வுகளை இதுவரை அது நடத்தியுள்ளது. அவ்வகையில் 2019 - 2020 ஆம் ஆண்டில் அது அடித்த கொள்ளை 50.19 கோடி ரூபாய். இப்பொழுது அதன் வருமானத்தைத் தெரிவிக்க அந்நிறுவனம் மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் தமிழகக் கல்வியின் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த அநீதியை ஒன்றிய அரசு தடுப்பதற்கு ஆயத்தமாக இல்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும் இவ்வளவு கொடிய நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்குக் கோரும் அரசின் கோரிக்கையையும் ஒன்றிய அரசு பொருட்படுத்துவதே இல்லை.

● அடுத்து, மோடி அரசு கொண்டு வந்த தேசியக் கல்விக்கொள்கை 2020, தமிழகத்தின் கல்விக் கட்டமைப்பையே சிதைக்கக் கூடியதாக உள்ளது. வணிகமயம் (Commercialization) ஒற்றைமயம் (Centralaization) காவிமயம் (Communalaization) ஆகிய கோட்பாடுகளை உள்ளடக்கிய இக்கல்விக் கொள்கை முற்றிலும் மாநிலங்களுக்கு எதிரானதாகும். மேலும், இதன் மூலம் தமிழகம் பல்லாண்டுகளாக எதிர்த்து வரும் மும்மொழிக் கொள்கையை ஒன்றிய அரசு நம் மீது திணிக்கிறது. மும்மொழிக் கல்வியைக் கட்டாயமாக்கும் பிஎம்ஸ்ரீ பள்ளிகளைத் தமிழகத்தில் திறக்காவிட்டால், தமிழக அரசுக்குத் தரவேண்டிய பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைத் தர முடியாது என ஒன்றிய அரசு பிடிவாதம் பிடிக்கிறது.

● தேசியக் கல்விக் கொள்கை 2020, தாய்மொழிக் கல்வியை வலியுறுத்துகிறது எனப் பொய்யாகப் பரப்புரை செய்து வருகிறது பா.ஜ.க. ஆனால் தாய்மொழிக் கல்வி கட்டாயம் என கொள்கையறிக்கையில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. இயன்றவரை தாய்மொழிக் கல்வியைப் பயன்படுத்துமாறுதான் அது பரிந்துரைக்கிறது.

● 1964 - ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கோத்தாரிக் கல்வி ஆணையம், தேசிய வருமானத்தில் 6% கல்விக்கு ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தியது. ஆனால் 60 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட ஒன்றிய அரசு 2024 - ஆம் ஆண்டில் கல்விக்காக 2.5% அளவுக்குத்தான் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஏற்கெனவே நிதி ஒதுக்கீட்டில் தமிழகத்திற்குப் பாகுபாடு காட்டும் ஒன்றிய அரசு தற்பொழுது கல்விக்கான நிதியிலும் துரோகம் செய்வதற்கு இது துணை போவதாக அமையும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

● கல்வியில் மட்டுமல்ல, பண்பாட்டுப் புலத்திலும் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. பாரதீய ஜனதாக் கட்சியின் **"ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு"** எனும் முழக்கம் ஒன்றே மாநிலங்களின் தனித்தன்மைக்கு ஆர் எஸ் எஸ் உரிய அங்கீகாரம் தராது என்பதைத் தெளிவாக்குகிறது. வேற்றுமையில் ஒற்றுமை, பன்மைக் கோட்பாடு போன்றவற்றை அடிப்படையிலேயே சங்கிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்:

அந்த வகையில்தான் சனாதனத்தைத் . தூக்கிப் பிடிக்கும் சமசுகிருதத்திற்கு அளவற்ற நிதியை ஒதுக்கீடு செய்கிறது ஆர் எஸ் எஸ் அரசு. 2014-15 முதல் 2024-25 வரை மோடி அரசு சமசுகிருதத்திற்கு அள்ளிக் கொடுத்த தொகை ரூ.2532.51 கோடி. ஆனால், தமிழுக்குக் கிள்ளிக் கொடுத்த தொகை ரூ.113.48 கோடி மட்டுமே. அதாவது சமசுகிருதத்திற்குத் தாரை வார்த்த தொகையை விடத் தமிழுக்கு வழங்கிய தொகை 22 மடங்கு குறைவு.

● இந்தியாவில் சமசுகிருதத்திற்காக 18 பல்கலைக் கழகங்கள் உள்ளன. தமிழுக்கு ஒன்றே ஒன்று தஞ்சையில்! அதே போல், எட்டாவதுஅட்டவணையில் உள்ள மொழிகளிலேயே மிகக் குறைவான 24,821 பேர் மட்டுமே, அதாவது 0.002% பேர் பேசுகிற சமசுகிருதத்தைக் கற்பிக்க 6,100 ஆசிரியர்கள் பிஎம் ஸ்ரீ பள்ளிகளில் நியமிக்கப் பட்டுள்ளனர். இரண்டாவது மொழியாக, மூன்றாவது மொழியாக சமசுகிருதத்தைப் பேசுபவர்களைச் சேர்த்தால் கூட 1% கூட வரவில்லை. கால் சதவீதம் மட்டுமே வருகிறது.. அதே போல், தமிழ்நாட்டிலுள்ள ஒன்றிய அரசின் (கேந்திரிய வித்யாலயா) பள்ளிகளில் இந்தியைக் கற்பிக்க 86 ஆசிரியர்களும், சமசுகிருதம் கற்பிக்க 65 ஆசிரியர்களும் உள்ளனர். இந்த ஆசிரியப் பணியிடங்கள் அனைத்தும் நிரந்தரமானவை. ஆனால் தமிழ்நாட்டிலுள்ள இதே பள்ளிகளில் தமிழ் மொழியைக் கற்றுத்தர ஒரே ஓர் ஆசிரியர்கூடக் கிடையாது. அந்தத் தமிழாசிரியர் பணியிடங்களும் நிரந்தரமானவை அல்ல. அவை தற்காலிகமான பணி இடங்களே! எவ்வளவு பெரிய பண்பாட்டுச் சீரழிவை ஒன்றிய அரசு தமிழகத்திற்கு எதிராகச் செய்து கொண்டிருக்கிறது என்பதற்கு இந்தப் புள்ளி விவரங்களே சான்றாகும்.

● கடந்த 90 ஆண்டுகளாக இடைவெளி இல்லாமல் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்றுவரும் மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் காரணமாக இந்தியாவிலேயே எங்கும் இல்லாத வகையில் தமிழகத்திற்கு மட்டும் இருமொழிக் கொள்கைக்குச் சட்ட வழியில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மாநிலத்தின் இந்தச் சட்டப் பாதுகாப்பை ஒரு சிறிதும் ஒன்றிய அரசு மதிப்பதில்லை.

தமிழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரசின் நடைமுறைகளுக்கும் ஒன்றிய அரசு இந்தியை மட்டுமே ஆணவத்துடன் பயன்படுத்தி வருகிறது. தவிரவும், தமிழகம் உள்ளிட்ட இந்திய மாநிலங்கள், பிற மாநிலங்களுடன் இந்தியில் மட்டுமே கடிதத்தொடர்பு கொள்ள வேண்டும் என அமித்ஷா வலியுறுத்தி வருகிறார்.

● மேலும் தமிழகத்திலுள்ள தொடர்வண்டித்துறை, வங்கிகள், ஒன்றிய அரசு அலுவலகங்கள், வானூர்தி நிலையங்கள், தொலைத் தொடர்புத்துறை போன்ற பல்வேறு அலுவலகங்களிலும் இந்திக்கே முதல் மரியாதை வழங்கப்படுகிறது. அங்கெல்லாம் தமிழகத்தின் அரசு மொழியான தமிழ் இன்னும் நீச மொழியாகவே ஒதுக்கப்படுகிறது. தமிழின் பெருமை குறித்து அருள்வாக்குப் பொழியும் நரேந்திர மோடி நிலவும் வெட்கக்கேடான நிலையை மாற்றி அமைக்க ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போடவில்லை என்பதுதான் நடைமுறையாக உள்ளது. அதே போல் பொதிகைத் தொலைக்காட்சி எனும் அழகுத் தமிழ்ப் பெயரை ஆகாஷ்வாணி என அற்பத்தனமாக மாற்றியதும் ஒன்றிய அரசுதான்.

● தமிழ் மொழியை மட்டுமல்ல, தமிழின் தொன்மையையும். பாரதீய சனதாக் கட்சி அரசால் செரிக்க முடியவில்லை. அறிவியல் வழியாக மெய்ப்பிக்கப்பட்ட தொல்லியலாளர் அமர்நாத் இராமக்கிருட்டிணன் அவர்களின் கீழடி அகழாய்வு அறிக்கையைக்கூட கடந்த 10 ஆண்டுகளாக வெளியிடாமல் அழுத்தி வைத்திருக்கிறது. எப்படியாவது வேத காலத்திற்குப் பிற்பட்டதுதான் கீழடி நாகரிகம் என நிலை நிறுத்திட வேண்டுமென ஒன்றிய அரசு துடியாய்த் துடிக்கிறது. கீழடியின்

காலத்தை 500 ஆண்டுகள் குறைத்துப் பதிவிடுமாறு அது அமர்நாத் அவர்களுக்குக் கடும் நெருக்கடி கொடுக்கிறது. அது மட்டுமல்லாமல் தமிழகத் தொல்லியல் ஆய்வுக்கு நிதி வழங்குவதையும் முற்றாக நிறுத்திவிட்டது. மாறாக, வேத நாகரிகத்தை உயர்த்திப் பிடிக்கும் சரசுவதி நதி நாகரிகத்திற்குக் கோடிக் கணக்கான ரூபாய்களைக் கொட்டிக் கொடுக்கிறது. இவையெல்லாம் தமிழகத்தின் மீதான பண்பாட்டுப் படையெடுப்பு என்றே கூறலாம்.

● அதே போல், தேசிய கல்விக் கொள்கை 2020 மூலம் பழைய புராணக் குப்பைகளைத் தமிழகத்து மாணவர்களின் மீது திணிக்க முயல்கிறது. தனக்குத் தானே வீரர் என அடைமொழி போட்டுக் கொண்ட "வீர" சவார்க்கரைப் பற்றித் தெரிந்துகொண்டு தமிழ் மாணவனுக்கு ஆகப்போவது என்ன? ஏற்கெனவே தமிழ்மாணவனுக்கு சிவாஜியைத் தெரியும். ஆனால் அவனுக்குத் தமிழ்மன்னர்கள் பற்றி எதுவும் தெரியாது. அதே போல் நம் மாணவனுக்கு ஜான்சி இராணியைத் தெரியும். ஆனால் வேலு நாச்சியாரைப் பற்றி எதுவும் தெரியாது விவேகானந்தரைப் பற்றித் தெரியும் வள்ளலாரை பற்றித் தெரியாது. திலகரைப் பற்றித் தெரியும் ஆனால் வ உ சி பற்றி எதுவும் தெரியாது. தமிழ்நாட்டில் வட இந்தியத் தலைவர்களின் பெயர்கள் வீதிக்கு வீதி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் புதுதில்லியில் நடைபெறும குடியரசுநாள் அணி வகுப்பில் வஉசி. படம் போட்ட அலங்கார ஊர்திக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல வஉசி அவர்களை அந்த சமயத்தில் இழிவுபடுத்திப் பேசினர் வட இந்திய அதிகாரிகள்.

● தமிழை நீதிமன்ற மொழியாக்க ஒன்றிய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. அதே போல் தமிழை ஆலய மொழியாக்கும் முயற்சிக்கும் தனது சனாதன சங்கிகளின் மறைமுகத் துணையோடு ஒன்றிய அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இவையெல்லாம் சில எடுத்துக் காட்டுகள். மட்டுமே! இப்படிப் பல வகையிலும் பண்பாட்டுத் துறையில் தமிழ்நாட்டிற்கான உரிமையை ஒன்றிய அரசு பறித்து வருகிறது.

வரலாற்று அடிப்படையிலும் சூழலியல் அடிப்படையிலும் பறிக்கப்படும் உரிமைகள் :

● மாநிலங்களின் குறிப்பாகத் தமிழினத்தின் அடையாளத்தையும், தொன்மையையும், வரலாற்றுப் பெருமையையும், தனித்துவத்தையும் இந்திய ஆரிய இனவாத அரசு மறுக்கிறது!

● ஆரியப் பெருமையை இந்தியத் துணைக்கண்டத்தில் நிறுவுவதையும், ஆரியப் பண்பாட்டையே இந்தியப் பண்பாடு என்று நிலைநாட்டுவதையும், அனைத்து மொழிகளுக்கும் சமஸ்கிருதமே தாய் என்று அனைவரையும் ஏற்கச் செய்வதையும், தன் கடமையாக இந்திய அரசு கருதுகிறது!

● பள்ளிகளில் வரலாறு மாற்றியமைக்கப்படுகிறது. தேசியப் பார்வையில் வரலாறு கற்பிப்பதாகக் கூறிக்கொண்டு, ஆரிய, சமஸ்கிருத, பார்ப்பனிய மேலாதிக்கத்தை நிறுவும் வகையிலேயே பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன!

● வாஜ்பாயி பிரதமராக இருந்த காலத்தில் (1999 - 2003), இந்தியப் பண்பாடு மற்றும் வரலாற்றுக் கழகம், பல்கலைக்கழக நல்கைக்குழு (UGC) ஆகிய நிறுவனங்களில் ஆர்.எஸ்.எஸ் காரர்களைக் கொண்டு நிரப்பியது.

● நேர்மையான வரலாற்றாளர்களும் தொல்லியலாளர்களும் வெளியேற்றப்பட்டார்கள். கல்வி, தொல்லியல், பண்பாடு சார்ந்த அனைத்துத் துறைகளிலும் இன்றுவரை சங்கிகளே இருக்கின்றனர்!

● பண்டைக்கால இந்திய வரலாற்றில் வட இந்தியாவுக்கே முன்னுரிமை! சேர, சோழ, பாண்டியர்களுக்கு இடமில்லை! இடைக்கால இந்திய வரலாற்றில் தமிழ்நாடு பேசப்படவில்லை! சோழர்கள் பற்றி மட்டும் சிறிய பகுதி இடம் பெற்றுள்ளது.

● தொல்லியல் துறையின் அதிகாரம் முழுக்க முழுக்க இந்திய அரசிடமே உள்ளது. இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சகத்தின் பிரிவாகச் செயல்படுகிறது. 1961 - இல் தமிழ்நாட்டரசின் கீழ்த் தொல்லியல் துறை செயல்பட்டாலும் தமிழ்நாடு அரசு கண்டறியும் முடிவுகளை அது தானாக அறிவிக்க முடிவதில்லை. அப்படித்தான் கீழடி முடிவையும் இந்திய அரசு நிறுத்தி வைத்திருக்கிறது.

● இந்தியாவில் கிடைக்கும் கல்வெட்டுகளில் 60% கல்வெட்டுகள் தமிழ்நாட்டில்தான் உள்ளன! ஆனால் எழுத்தறிவு வட இந்தியாவில் இருந்துதான் தமிழ்நாட்டிற்கு வந்ததாக வரலாற்றைத் திரித்துப் பதிவு செய்கிறார்கள்!

● கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முந்தைய அழகன்குளம், கீழடி, கொடுமணல் அகழ்வாய்வுகளில் கிடைத்த பானை ஓடுகளில் தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன!

● ஆனால், ஆரிய இனவெறி கொண்ட இந்திய அரசும், பார்ப்பனிய அறிஞர்களும் கிமு மூன்றாம் நூற்றாண்டில்தான் தமிழ்நாட்டில் எழுத்தறிவு பரவியதாகப் பொய்யுரைக்கிறார்கள்! வடநாட்டுப் பிராமி எழுத்திலிருந்து தமிழ் எழுத்துகள் உருவானதாகக் கதையளக்கிறார்கள்!

● கீழடி, கொடுமணலில் கிடைத்த பானை ஓடுகள் கி.மு. ஆறாம் நூற் றாண்டில், தமிழ்நாட்டில் எழுத்தறிவு இருந்ததை உறுதி செய்கின்றன!

● சிந்துவெளி நாகரிகத்தை வேத நாகரிகம் என்றும், சிந்து ஆற்றுச் சமவெளியைச் சரஸ்வதி ஆற்றுச் சமவெளி என்றும் வரலாற்றைத் திரிக்கிறது இந்திய அரசு! இந்தியாவில் ஒருபோதும் ஓடியதாக வரலாற்றில் இல்லாது, வேதத்தில் மட்டுமே குறிப்பிடப்படுகிற சரஸ்வதி ஆற்றை இந்தியாவுக்குள் தேடுகிறார்கள்! இல்லாத சரஸ்வதி ஆற்றைத் தேட 900 கோடியை மோடி அரசும் அரியானா அரசும் செலவு செய்துள்ளன!

● சிந்துவெளி எழுத்துக் குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் தமிழகத்தில் மட்டுமே 70 விழுக்காடு கிடைத்துள்ளன! சிந்துவெளி தமிழுக்கும், தமிழி எழுத்துக்கும் இடையிலான இணைப்புச் சங்கிலியாக இவை உள்ளன!

● சிவகங்கை மாவட்டம், கீழடி அகழாய்வு வைகை ஆற்றங்கரையில் மலர்ந்த மேம்பட்ட நகர நாகரிகத்தை வெளிக்காட்டுகிறது!

● இந்தியத் தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் இராமக் கிருட்டிணா இதை 2015 - இல் கண்டறிந்து, கீழடி தமிழர் நாகரிகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று அறிவித்தார்.

● கங்கைக்கரை நகர நாகரிகத்தைவிட கீழடி நாகரிகம் மூத்தது என்பதை இந்திய ஒன்றிய அரசு ஏற்க மறுக்கிறது. கீழடி நகர நாகரித்தின் காலம் - கார்பன் கணிப்பு மூலம் கி.மு. 800 அளவில் முதற்கட்டம் நிலவியதாகக் கண்டறிந்த தொல்லியல் கண்காணிப்பாளர் கே. அமர்நாத் இராமக்கிருட்டிணா கணிப்பை இந்தியத் தொல்லியல் துறை ஏற்க மறுத்தது! ஆய்வு முடிவை மாற்றி எழுத வற்புறுத்தியது! 'அவர் மறுக்கவே அமர்நாத் இராமக்கிருட்டிணாவைப் பல இடங்களுக்கு இந்திய அரசு மாற்றியது.

● 2001 இல் பூம்புகாரில், ஆழ்கடல் தொல்லியல் ஆய்வு செய்த இங்கிலாந்தைச் சேர்ந்த கிரகாம் அன்காக் 11,500 ஆண்டுகளுக்கு முற்பட்ட நகரம் கடலுள் மூழ்கிக் கிடப்பதாக அறிவித்தார். இந்த ஆழ்கடல் ஆய்வு முடிவு உலகையே பரபரப்பில் ஆழ்த்தியது! இந்த ஆய்வு முடிவுகள் வேதகால நாகரிகத்தைவிட தமிழர் நாகரிகம் மூத்தது என்று நிலை நிறுத்தி விடும் என்பதால், இந்தியத் தொல்லியல் துறை இந்த ஆய்வைத் தொடர விரும்பவில்லை! ஆனால், இந்திய ஒன்றிய அரசு மகாபாரதத்தில் வரும் கிருஷ்ணனின் தலைநகர் துவாரகாவைக் கடலுள் தேடுகிறது! பணத்தைக் கொட்டி அழுகிறது!

● தமிழ்நாடு 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பைப் பயன்படுத்தியது! எஃகு இரும்பைத் தமிழர்கள்தாம் முதலில் பயன்படுத்தினார்கள்! ஆதிச்சநல்லூர், சிவகளை, மயிலாடும்பாறை, மாங்காடு, தெலுங்கனூர் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் தமிழ்நாடுதான் முதலில் இரும்பைக் கண்டறிந்து பயன்படுத்தியது என்பதை அறிவிக்கின்றன!

● தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் கண்டறியப்பட்ட இரும்புக் கருவிகளின் காலம் தான் மிகத் தொன்மையானது எனப் ப்ளோரிடாவிலுள்ள பீட்டா அனலிடிக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது!

● வட இந்தியாவில் இரும்பின் பயன்பாடு கி.மு. 2000 -த்தில் வந்தது! தமிழ்நாட்டில் அது கிமு 3000 -த்தில் பயன்பாட்டுக்கு முன்பே வந்துவிட்டது! இந்திய அரசு வாய்மூடி 'மவுன'மாக இருக்கிறது! தமிழ்நாட்டில் 5345 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புக்காலம் நிலவியதை மறைக்கிறது!

● தமிழ்நாடு அரசு தனது சொந்த செலவிலேயே அகழ்வாய்வுகளை நடத்துகிறது. இந்திய ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் உள்ள அதன் கட்டுப்பாட்டில் உள்ள நினைவுச் சின்னங்கள் பராமரிப்புக்கு மட்டுமே நிதி ஒதுக்குகிறது. ஆனால், அகழ்வாய்வுகளுக்கு நிதி மறுக்கிறது!

● 2025-ல் இந்திய அரசு குஜராத்துக்கு 8.53 கோடி ஒதுக்கியது. தமிழ்நாட்டுக்கு 3.36 கோடி மட்டுமே ஒதுக்கியது! தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் 25 கோடிக்குக் குறையாமல் அகழ்வாய்வுக்கு நிதி ஒதுக்குகிறது!

● அவ்வகையில், இந்தியத் தொல்லியல் துறை ஆர்.எஸ். எஸ். - இன் கட்டுப்பாட்டில் உள்ளது. 3500 ஆண்டுகால வேதகால நாகரிகத்தை

இந்திய நாகரிகம் என்கிறது. அதற்கும் முந்தைய தமிழர் நாகரிகத்தின் தொன்மை மறுக்கப்படுகிறது.

கனிமவள உரிமைகள் பறிபோகின்றன...

● மாநிலங்களின் (இங்குத் தமிழ்நாட்டின்) கனிம வளங்களைச் சூறையாடுகிறது இந்திய ஒன்றிய அரசு!

● இந்தியாவில் மாநிலங்களுக்கு, இங்குத் தமிழ்நாட்டுக்கு மண்மீது, கனிம வளத்தின் மீது, கடல் மீது உரிமையில்லை! இயற்கை வளத்தின் மீதும் உரிமையில்லை! அத்தனை உரிமைகளையும் இந்திய ஒன்றிய அரசு மறுக்கிறது!

● தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கனிமங்கள் (Major Minerals) நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, அணுசக்திக் கனிமங்கள், டங்ஸ்டன், எண்ணெய் - எரிவாயு உள்ளிட்டவற்றை ஒன்றிய அரசின் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் சட்டத்தின் கீழ் இந்திய ஒன்றிய அரசே கையாளுகிறது! சிறு கனிமங்கள் (Minor Minerals) மணல், சல்லி, கிரானைட் போன்றவை மட்டுமே மாநில அரசின் நிர்வாகத்தில் வருகின்றன! மாநிலங்களின் இங்குத் தமிழ்நாட்டின் நிலை இரங்கத்தக்கது!

● 2025 - இல், மதுரை மாவட்டம் மேலூர் அருகே டங்ஸ்டன் சுரங்கத் திட்டத்தை அறிவித்து, தனியார் நிறுவனத்திற்கு இந்திய ஒன்றிய அரசு அனுமதி அளித்தது. உள்ளூர் மக்கள் போராட்டத்தால் திட்டத்தைத் திரும்பப்பெற்றது!

● 2023 - இல், காவிரி டெல்டா பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் அமைக்க இந்திய அரசு ஏல அறிவிப்பு செய்தது! 2020- இல் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் நிலக்கரித் திட்டங்களை ஒன்றிய அரசு அறிவித்தது! அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் எதிர்த்ததால் ஏலப் பட்டியலில் இருந்து காவிரிப்படுகைப் பகுதி நீக்கப்பட்டது

● அணுசக்திக் கனிமங்களின் சுரங்கத் திட்டங்களுக்குப் பொதுமக்களின் கருத்துக் கேட்பு இனி கிடையாது என்று ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது! கதிர்வீச்சு உள்ள அணுக்கனிமத்தை மக்களின் கருத்துக் கேட்காமல் சுரங்கம் அமைத்து எடுப்பார்களாம்!

● நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் (லிக்னைட் கார்ப்ப ரேஷன்) மூலம் ஆண்டுதோறும் 2.6 கோடி கல்லெடை (டன்) நிலக்கரி எடுக்கிறது. தமிழ்நாட்டுக்கு 6% உரிமத்தொகை (ராயல்டி) தருவதாகக் கூறுகிறது. (மற்றும் மாநிலங்களில் எடுக்கப்படும் கனிமப் பொருள்களுக்கு 15 விழுக்காடு உரிமத்தொகை (ராயல்டி தரப்படுகிறது) எடுக்கப்படும் நிலக்கரியின் அளவை யாரும் அறிய மாட்டார்கள். ஒவ்வோர் ஆண்டும், தமிழ்நாட்டின் நிலக்கரி வளம் பல கோடிகளுக்குச் சூறையாடப்படுகிறது!

● காவிரி படுகையில் இருந்து இந்திய அரசின் நிறுவனங்கள் ஓஎன்ஜிசி எண்ணெய் எரிவாயுவை நீண்ட காலமாக எடுத்து வருகிறது ஆண்டுதோறும் 4 இலட்சம் டன் எண்ணெய், 40 இலட்சம் கன மீட்டர் எரிவாயு எடுப்பதாக ஓ. என். ஜி. சி கூறுகிறது. ஆனால் இதைவிடப் பன்மடங்கு அதிகமாக எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழ்நாடு அரசின் அனுமதி இல்லாமலே பல எண்ணெய் - எரிவாயுக் கிணறுகள் தமிழ்நாட்டில் செயல்படுகின்றன. தமிழ்நாட்டின் எண்ணெய் வளம் இரவு பகலாகச் சூறையாடப்படுகிறது!

● ஐட்ரோ கார்பன் எரிவாயுத் திட்டங்களால் காவிரிப்படுகை பாழாகிவிட்டது! நிலத்தடி நீரை எதிர்காலத்தில் பயன்படுத்த முடியாது! பல பகுதிகளில் மக்கள் புற்றுநோய், மலட்டுத்தன்மை உள்ளிட்ட நோய்களால் தாக்கப்பட்டுள்ளார்கள்! ஆனாலும் பழைய எண்ணெய்-எரிவாயுக் கிணறுகளால் காவிரிப் படுகை தொடர்ந்து பாழாகிக் கொண்டிருக்கிறது.

● கார்ப்பரேட் முதலாளிகள் எந்த வகை ஐட்ரோகார்பனையும், எந்த ஆழத்திலிருந்தும் எடுத்துக் கொள்ள வசதியாகப் புதிய ஐட்ரோகார்பன் ஆய்வு உரிமக் கொள்கையை (HELP) மோடி 2016 - இல் அறிவித்தார். எந்த நிலப்பகுதியிலும் கார்ப்பரேட்டுகள் விரும்பினால் திட்டங்களைச் செயல்படுத்த "திறந்து விடப்பட்ட உரிமத் திட்டம் " (Open Acreages Licencing program) என்ற திட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழ்நாட்டின் நிலப்பரப்பிலும், கடற்பரப்பிலும், தனியார் நிறுவனங்களும், இந்திய அரசு நிறுவனமும், உரிமங்களைப் பெற்றுச் சூறையாட காத்துக் கொண்டிருக்கின்றன!

● மிக அதிக அளவில் கனிம வளங்கள் திருட்டுத்தனமாகவும் விதிகளை மீறியும் எடுக்கப்படுகின்றன! அனுமதிக்கப்படாத கிணறுகள், முறையற்ற உரிமங்கள், தொடரும் குழாய்க் கசிவுகள், சுற்றுச் சூழல் அனுமதியின்றி இயங்குதல், சொல்லப்படும் அளவைத் தாண்டிக் கனிமங்களை எடுத்தல், அனுமதிக்கப்பட்ட தொழில்நுட்பத்தை மீறிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் - இவற்றால் தமிழ்நாட்டின் காவிரிப் படுகை உள்ளிட்டுப் பல பகுதிகள், பெரும் பாதிப்புகளைச் சந்திக்கின்றன. தமிழ்நாடு நிலத்தடி நீரை இழந்துள்ளது! வயல்கள் வளத்தை இழந்துள்ளன! மக்கள் உடல் நலத்தை இழந்துள்ளார்கள்!

● இன்று உலகில் கனிமங்களே முக்கியமானவை! மக்கள் அல்ல! மக்களை விரட்டிவிட்டு அல்லது ஒழித்துவிட்டுக் கனிமங்களைச் சூறையாட நிறுவனங்கள் களத்தில் நிற்கின்றன! இந்திய அரசின் சுரங்க அமைச்சகம் "தேசிய முக்கிய கனிமங்கள்" எடுப்பு குறித்த அறிவிப்பை 2024 -25 பட்ஜெட்டில் அறிவித்தது. முக்கிய கனிமங்கள் டங்ஸ்டன், டைட்டானியம், லித்தியம் போன்றவற்றைக் "கிரிட்டிக்கல் மினரல்ஸ் " என்று அறிவித்து, நிலப்பகுதி மட்டுமல்ல; ஆழ்கடலிலும் அவற்றை எடுக்க ஏலம் விட்டிருக்கிறது இந்திய அரசு!

● அணுக்கனிமங்களைக் கண்டுபிடிப்பதில் தனியார் நிறுவனமும் ஈடுபடலாம் என்று 2023 - இல் சட்டத் திருத்தம் செய்துவிட்டது. முன்னமே கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதியில் தாது மணல் கொள்ளை நடந்து கொண்டிருக்கிறது!

● ஐட்ரோகார்பன் ஆய்வு அனுமதி கொள்கையின்படி, ஒன்பதாவது சுற்று ஏலத்தில், தமிழ்நாட்டின் ஆழ்கடல் பகுதியில் 32,485 ச.கி.மீ. பரப்பளவிற்கு ஏலம் விடப்பட்டுள்ளது!

● வேதாந்தா, ஓஎன்ஜிசி நிறுவனங்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டு மண்ணை மரண பூமியாகவும், கடலை மீன்களற்ற எண்ணெய்க் கசிவு - வேதியியல் கழிவு தேக்கமாக மாற்றவும் காத்திருக்கின்றன.

● குமரிமுனைக்குத் தென்மேற்கே, ஆழ்கடலில், Wadge Bank எனப்படும் 'படுகைக்கரை'யில் 10,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் ஐட்ரோகார்பன் கிணறுகளை அமைக்க ஓஎன்ஜிசி காத்திருக்கிறது. பல்லாயிரம் மீனவர்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் இப்பகுதி ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட இருக்கிறது!

● தமிழ்நாட்டின் கடற்கரைக் கனிம வளச்சூறைக்கு ஏலம் விடப்படுகிறது. அணுக்கனிம சுரங்கம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்படுகிறது!

● பொதுத்துறைகள் மட்டும் விற்பனைக்கு அல்ல! மலைகள், காடுகள், ஆறுகள், நிலத்தடி கனிமங்கள் கார்ப்பரேட்டுகளுக்கு விற்கப்படுகின்றன!

● 2020 -இல் பெருமுதலாளிகளின் தேவைக்கு ஏற்ப சுற்றுச்சூழல் விதிமுறைகள் தளர்த்தப்பட்டன. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு விதிமுறைகள்-2006 இல் மாற்றம் செய்யப்பட்டது.

கார்ப்பரேட்டுகளின் விருப்பத்திற்கு ஏற்பப் பொதுமக்களின் கருத்துகள் கேட்பு இனிக் கிடையாது! காற்று மாசுபாடு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம் (1981), நீர் மாசுபாடு மற்றும் கட்டுப்பாடு சட்டம் (1974) ஆகிய சட்டங்கள் திருத்தப்பட்டு விட்டன!

இனி, 39 வகைத் தொழிற்சாலைகள் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அனுமதி பெறாமல் செயல்படலாம்!

● எட்டு வழிச்சாலைக்கு இயற்கை வளங்களும், காடுகளும், மலைகளும் அழிக்கப்படுகின்றன! 20 ஆண்டுகளில் 11% மேற்கு தொடர்ச்சி மலை அழிக்கப்பட்டிருக்கிறது!

● திருவண்ணாமலையை ஒட்டிய மலைகள் இரும்புக்கனிமம் எடுக்க ஜின்டால் நிறுவனத்தால் குறி வைக்கப்பட்டன. மக்கள் போராட்டங்கள் மலைகளைப் பாதுகாத்தன! கிருஷ்ணகிரி, தர்மபுரி பகுதியில் மலைகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன! கரூர் மாவட்டத்தில் தோகைமலை காணாமல் போய்விட்டது!

● கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை அருகே கடலில் 18 கி.மீ. தூரத்தில் ஐட்ரோகார்பன் கிணறுகள் அமைக்க இந்துஸ்தான் ஆயில் எக்சுபுளோரேசன் கம்பெனி நிறுவனத்திற்கு இந்திய ஒன்றிய அரசு உரிமம் அளித்துள்ளது. அந் நிறுவனத்தின் விண்ணப்பம் தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்தின் பரிசீலனையில் உள்ளது. தமிழ்நாட்டின் கடற் பகுதியை அபாயம் எட்டிப் பார்க்கிறது!

● 2017 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் ஐட்ரோகார்பன் திட்ட எதிர்ப்புப் போராட்டமும், தஞ்சை மாவட்டத்தில் கதிராமங்கலம் ஐட்ரோகார்பன் திட்ட எதிர்ப்புப் போராட்டமும், தமிழ்நாட்டு மக்களுக்கு உணர்வு ஊட்டின!

● தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த இருந்த ஒன்றிய அரசின் பல திட்டங்களை மக்கள் போராட்டங்கள் தடுத்து நிறுத்தியுள்ளன! ஒன்றிய அரசுக்கு எண்ணெய்-எரிவாயு, கனிமங்கள், நிலக்கரி- இவை வேண்டும். மண்ணையும், நீரையும் மக்களையும் பற்றி கவலையில்லை! களத்தில் இறங்கி காக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது! ●

2026 ஆகத்து 9 ஆம் நாள் புதுக்கோட்டையில் நடைபெற்ற..

மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:..

1. வரலாற்றில் மிக நீண்ட நெடிய ஆயிரம் ஆண்டுகள் பழமை உடைய தமிழ்ப் பெரு நிலத்தை அதன் அதிகாரத்தைப் பிரித்தானிய வல்லாட்சியரிடமும், பின்னர் இந்திய அரசு அதிகாரத்திடமும் இழந்துவிட்ட நிலையில் எப்படியாவது அவற்றை மீட்கக் குறைந்த அளவு மாநிலம் என்கிற முறையிலாவது அதை நிலைநிறுத்திடவும், அதற்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிடவும் போராடிய பன்னூற்றுக்கணக்கான தலைவர்களுக்கும், இலக்கக் கணக்கான தமிழ் உணர்வாளர்களுக்கும் தமிழக மக்கள் முன்னணி முன்னெடுத்து நடத்தும் மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாடு வீர வணக்கத்தையும் புகழ் வணக்கத்தையும் செலுத்துகிறது..

2. தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் எல்லாம் தம் அடையாளங்களே அழிக்கப் படும்படி, அவற்றின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. மாநிலங்களையே அழித்து விடலாம் என்கிற கருத்தில் மாநிலங்களைச் சிதைப்பது, அவற்றின் அதிகாரங்களை பறிப்பது, ஆங்கிலேயனிடம் அடிமைப்பட்டு 'கப்பம்' கட்டி வந்த முறை போல இந்திய அரசுக்கு அடிமை சேவகம் செய்ய ஒன்றிய அரசு மாநிலங்களின் மீது அழுத்தம் தருவது தடையின்றித் தொடர்கிறது. இத்தகைய வல்லாட்சி செய்து வரும் இந்தியப் பாசிசப் பார்ப்பனிய அரசின் அதிகாரப் போக்கை இம்மாநாடு மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது..

3. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாட்டு அரசின் அதிகாரங்களைச் செயலிழக்க வைக்கும் முறையில் இந்திய அரசின் கண்காணியாக அதிகார வெறியில் செயல்படும் ஆளுநர் என்கிற அமைப்பு முறையையே ஒழித்தாக வேண்டும் என்று இந்த மாநாடு அறிவிக்கிறது. ஆளுநர் அமைப்பையே ஒழிக்கும் முயற்சியில் தமிழ்நாட்டின் கட்சிகள் இயக்கங்கள் அனைத்தும் ஒங்கிக் குரல் எழுப்பிப் போராடிட முன்வர வேண்டும் என்று இந்த மாநாட்டின் வழியாகத் தமிழக மக்கள் முன்னணி அனைவரையும் அழைக்கிறது..

4. கல்வித்துறையை மாநிலப் பட்டியலுக்கு மீட்பதோடு, துணைவேந்தர் அமர்த்தம் உள்ளிட்ட பல்கலைக்கழக ஆளுகை அனைத்தும் மாநில அரசுகளே பெற்றிருக்க வேண்டும் எனவும், கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான நீட் உள்ளிட்ட அனைத்து நுழைவுத் தேர்வுகளையும் இந்திய அரசே நடத்தும்முறை முற்றிலும் தடை செய்யப்பட வேண்டும் எனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது..

5. ஜிஎஸ்டி., சுங்கச்சாவடிகள் மூலம் வழிப்பறிக் கொள்ளை அடிக்கப்படுவதையும், தமிழ்நாட்டில் நெய்வேலி நிலக்கரி, சேலம் இரும்பு, காவிரிப் படுகை எண்ணெய்கள் உள்ளிட்ட பிற கனிம வளங்கள், கடல் வளங்கள் இந்திய அரசாலும் வெளிநாட்டுக் கொள்ளை நிறுவனங்களாலும் சூறையாடப்படுவதையும் வன்மையாகக் கண்டிப்பதோடு உடனடியாக அவற்றைத் தமிழ்நாட்டு அரசும் மக்களும் தடுத்து நிறுத்திட வேண்டும் என்றும் இம்மாநாடு கோரிக்கை விடுக்கிறது..

6. தமிழர்கள் தங்களின் தேசிய இனமாகிய தமிழர் எனும் அடையாளத்தையே பதிவு செய்திட வேண்டும். இந்திய அரசியல் சட்டத்தின் படி தமிழ்நாட்டின் தமிழர்கள் உள்ளிட்டுப் பிற மாநிலங்களின் மொழி இனத்தினர் எவரும் இந்தியக் குடிமகனாக இருக்க முடியுமே அல்லாமல் இந்தியர் என்கிற தேசிய இனமாக அடையாளப்படுத்துவதை மறுக்கவும், தடை செய்யவும் வேண்டும்.. தமிழ்நாட்டின் இயக்கங்களும் கட்சிகளும் இவற்றை முன்னெடுத்து வலிமையாகப் போராட அழைப்பு விடுக்கிறது தமிழக மக்கள் முன்னணி..

7. மெட்ராஸ் ஹைகோர்ட் என்கிற பெயருடைய உயர்நீதிமன்றம் தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்றே அழைக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டு அளவிலேயே தமிழ்நாட்டிற்கு உள்ளேயே தனியாக ஓர் உச்சநீதி மன்றம் இருக்க வேண்டும் என்றும், உயர் நீதிமன்ற உச்ச நீதிமன்ற வழக்காடு மொழியாகத் தமிழ் இருக்க வேண்டுமென்றும், உயர் நீதிமன்ற இலச்சினையில் உள்ள சத்தியமேவே ஜெயதே என்கிற சமசுக்கிருத வரி நீக்கப்பட்டு வாய்மையே வெல்லும் எனத் தமிழில் உடனடியாக மாற்ற வேண்டும் என்றும் இம்மாநாடு வலியுறுத்துகிறது..

8. தமிழ்நாட்டின் கல்விமுறை ஒரே திட்டத்தின் கீழ் மட்டுமே தமிழகக் கல்வித்துறை இயங்க வேண்டும். பன்னாட்டுக் கல்வித் திட்டங்கள், சிபிஎஸ்சி, கேந்திரிய வித்யாலயா - உள்ளிட்ட பிற கல்விக்கூடங்கள் அனைத்தையும் தமிழ்நாடு அரசின் பொறுப்பில் உடனடியாக மாற்றியமைத்திட வேண்டும்.. பள்ளிக் கல்வி வரை அனைத்துப் பாடங்களும் தமிழ் வழியிலேயே அமைய வேண்டும்..அதற்கு முன்னோட்டமாகத் தமிழத்திலுள்ள அனைத்து ஆங்கில வழி மழலையர்பள்ளிகைளையும், தமிழ்வழி மழலையர் பள்ளிகளாக மாற்றி அமைத்திட வேண்டும். ஆங்கிலமும் பிற விருப்ப மொழிகளும் பாட மொழிகளாக இருக்கலாமே தவிர, பயிற்றுமொழியாக இருக்கத் தடைசெய்தாக வேண்டும்..

9. தமிழ்நாடு அரசு அறிவித்திருக்கிற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை இழிவு படுத்தும் வகையில் பின்தள்ளிவிடுவதோடு, இந்து மத வெறியைத் தூண்டக்கூடிய வந்தே மாதரத்தைப் பாட வேண்டும் எனக் கட்டாயப்படுத்துவதை இம்மாநாடு கடுமையாகக் கண்டிக்கிறது.. எந்தச் சூழலிலும் இதற்குத் தமிழ்நாட்டு இயக்கங்களும் கட்சிகளும் மக்களும் இசைந்து விடக்கூடாது என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

10. இது நாள் வரை சிங்கள வெறி அரசால் சுட்டுக் கொல்லப்பட்ட 600க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களைப் பற்றிக் கவலைப்படாத, மீனவர்கள் மீதான தொடர்ந்த தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த வக்கற்ற இந்திய பாசிசப் பார்ப்பனிய அரசின் பார்ப்பனியத் திமிர்ப் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. ஆழ்கடல் மீன்பிடிப்பு, மீனவர்கள் மீதான தொடர் அடக்குமுறைகள் ஆகியவற்றைச் செய்யக்கூடிய இந்திய அரசைத் தமிழ்நாட்டு மீனவர்களோடு இணைந்து தமிழ்நாட்டின் கட்சிகள் இயக்கங்கள் அனைத்தும் போராடிட வேண்டுமென இம்மாநாடு அனைவரையும் அறைகூவி அழைக்கிறது..

11. சாதி ஆணவத்தின் கீழ்த் தொடர்ந்து தமிழ்நாடெங்கும் நடந்து வரும் ஆணவப் படுகொலைகளை நடத்தக்கூடிய சாதித் திமிர் பிடித்த இயக்கங்களைச், சாதி வெறியர்களின் போக்கை இம்மாநாடு மிகக் கடுமையாகக் கண்டிக்கிறது. தமிழ்நாட்டு உரிமை நலன்கள் மீட்பு குறித்தானப் போராட்டங்கள் நடக்கிற போதெல்லாம் சாதிக் கலவரங்களையும் மதக் கலவரங்களையும் திட்டமிட்டுச் சூழ்ச்சியாகப் பாசிசப் பார்ப்பனிய பாஜக செய்து வருவதை மிகக் கடுமையாக எதிர்த்தாக வேண்டும்.. சாதி ஆணவக் கொடுமையோடு இயங்குகிற இயக்கங்களைத் தடை செய்தாக வேண்டும். அவற்றுக்குக் காரணமானவர்களை வாழ்நாள் முழுக்கச் சிறையில் அடைக்கும்படியான தண்டனை வழங்க வேண்டும்.. சாதி ஆணவப் படுகொலைக்கு எதிரானச் சட்டத்தை ஒன்றிய அரசு கொண்டுவர வேண்டும், இந்திய மகளிர் ஆணையம், அந்தியச் சட்ட ஆணையம் ஆகியன ஏற்கனவே வலியுறுத்தியுள்ளன. எனவே, அச்சட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக இயற்றிச் செயல்படுத்த வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

செயல் தீர்மானம்:

12. கடந்த 2017 ஆம் ஆண்டு சூலை மாதம் தொடங்கி இன்று வரை ஏறத்தாழ 10 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டை, தமிழ்நாட்டின் சிறு வணிகர்களை, பொதுமக்களை ஜிஎஸ்டி என்கிற பெயரில் வழிப்பறிக் கொள்ளைபோல் பணம் பிடுங்கி வருகிறது இந்திய அரசு. 2026 சூலை மாதத்தில் மட்டும் தமிழ்நாட்டில் இருந்து 10,414 கோடி பணம் பறிக்கப்பட்டதாக அவர்களே குறிப்புகள் தருகின்றனர். இந்த 10 ஆண்டுகளில் ஏறத்தாழ 20 இலக்கம் கோடி அளவிற்கு ஜிஎஸ்டி வரியாக மட்டுமே தமிழ்நாட்டு மக்கள் பறிகொடுத்திருக்கிறார்கள். இத்தகைய இழப்பு தமிழ்நாட்டு மக்களின் பேரிழப்பாக இருக்கும் நிலையில் அவ்வாறு ஜி.எஸ். டி.யால் தமிழ்நாட்டின் தொழில் வளமும் வணிகமும் பெருமளவில் நசுக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தில் ஜிஎஸ்டி என்று இந்திய அரசு நாள்தோறும் தொடர்ந்து வரிகள் பறித்து வருவது சனநாயகத்திற்கே எதிரானது. எனவே வரிக்கொள்ளையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தமிழ்நாட்டின் தொழில் முனைவோர், வணிகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரையும் திரட்டித் தமிழக மக்கள் முன்னணி மிகப்பெரும் போராட்டத்தை வரும் நவம்பர் மாதத்தில் நடத்துமென இம்மாநாட்டின் வழி அறிவிக்கிறோம்..

தமிழ்நாடு உரிமை பறிப்பு எதிர்ப்பு மாநாடு - 2026

தோழர்களின் கருத்துகள்..

● 'ஓர் இனத்தின் வரலாறு தான் அந்த இனத்தின் ஆசிரியராக இருக்க முடியும்' அந்த வகையில் நம் தமிழ் இனத்தின் வரலாறு என்பது இன்றோ நேற்றோ உருவானது கிடையாது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர்கள் நம் தமிழர்கள். அப்படிப்பட்ட தமிழர்களும் நம் தமிழ் மொழியும் இன்றைக்கு போற்றப்படுகின்றனவா? தாய்மொழி வழி கல்வி இன்றைக்கு சாத்தியமாக இருக்கிறதா? என்ற கேள்விகள் இன்றைக்கு வெறும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் நாம் தானாக விடை கிடைத்துவிடும் என்று நினைத்தால் அது நம் முட்டாள்தனம். இதுபோன்ற உரிமை பறிப்பு எதிர்ப்பு மாநாடுகள் நடத்தி முதலில் நாம் யார்? நாம் எப்படிப்பட்டவர்கள்? என்ற புரிதலை நமக்கு நாமே முதலில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வு, பொருளாதார ஆதிக்கம், இந்திய இறையாண்மை என்ற பெயரில் கட்டமைக்கப்படும் மத கோட்பாடு போன்ற எல்லாவற்றிலிருந்தும் நம் தமிழரின் உரிமைகளை நிலைநாட்ட போராடுவது தமிழர்களாகிய நம் கடமை என்றால் அந்தப் போராட்டத்திற்கான முன்னெடுப்பாகத் தயாராகுவதும் நம் கடமை தான். தமிழர்களின் சுயமரியாதையைச் சுட்டிக் காட்டும் வகையிலும், நம் உரிமைகள் எப்படி எல்லாம் தட்டிப் படைக்கப்படுகிறது என்ற நிலையையும், அதனால் ஏற்படும் விளைவையும் மிகவும் நேர்த்தியாக இந்த தமிழ்நாடு உரிமை பறிப்பு எதிர்ப்பு மாநாடு ஆகஸ்ட் ஒன்பதாம் தேதி எடுத்துரைத்தது. அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். நம் உரிமை பறிக்கப்படுகிறபோதெல்லாம் தமிழர்களின் எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலிக்கப்பட வேண்டும் என்றால் இது போன்ற மாநாடுகள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்தும் கோரிக்கையும் ஆகும்.

அருள்எழிலி

● மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாடு! மிகவும் சிறப்பு! மாநாட்டின் தொடக்க அறிவிப்பு முதல் மாநாட்டின் நிகழ்ச்சியின் நிறைவுப் பகுதி வரை தமிழகத்தில் ஒரு விடுதலைக்கான விதையை நாம் போட்டுள்ளோம். இந்திய வல்லாதிக்கம் தேசிய இனங்களுடைய அனைத்து உரிமைகளையும் பறித்து அடிமையாக வழிநடத்த முடிவு செய்துள்ளது, அதனுடைய வெளிப்பாடுதான் ஒரே நாடு! ஒரே தேர்தல்! என்கின்ற முழக்கத்தோடு வலம் வருகின்றது. இந்த முழக்கத்தை முறியடிப்பதற்குத் தமிழக மக்கள் ஒன்றிணைய வேண்டும். எதன் வழியில் நாம் ஒன்றிணைய வேண்டும் என்கின்ற அடிப்படை கூறுகளை இந்த மாநாடு கொண்டிருந்தது. எப்படியெனில் இது மார்க்சிய, அம்பேத்கரிய, பெரியாரியக் கொள்கை கொண்ட முற்போக்கு கூட்டணியில் அமைக்கப்பெற்ற ஒரு முன்னணியாக உருவெடுத்து இருக்கின்றது. தேர்தல் பாதையில் நிற்கின்ற அனைத்து கட்சிகளையும், இது அந்நியப்படுத்தியது உள்ளது மட்டுமல்லாமல், அதனுடைய முகத்திரையையும் கிழித்துள்ளது. தேர்தல் பாதையில் உள்ள கட்சிகள் அனைத்திற்கும் நிரந்தர எதிரியும் இல்லை! நிரந்தர நண்பனும் இல்லை!! நிரந்தர கொள்கையும் இல்லை!!! என்கின்ற அளவோடுதான் வளர்ந்து வந்திருக்கின்றன. இவற்றின் துணை கொண்டு எந்த ஒரு உரிமையும் பெற முடியாது என்பதனை இந்த மாநாடு வலிமையாக வலியுறுத்துகின்றது. தமிழ்த்தேசம் என்கின்ற கருத்தியலை மக்கள் நடுவில் கொண்டு சென்றது போல், தமிழ் தேசியத்திற்கு விடுதலைக்கான அனைத்துக் கூறுகளையும் இந்த மாநாடு அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியிருக்கின்றது. இந்த நகர்வு தமிழ் தேசிய விடுதலை மட்டுமல்ல, இந்திய சிறையில் அடைத்துள்ள அனைத்து தேசிய இனங்களையும் விடுவிப்பதற்கான அடிப்படைத் தளத்தை அமைத்துள்ளது என்பது பாராட்டுக்குரியது.

மெய்யப்பன்

● தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பில் தேர்தல் கட்சிகள் அல்லாத புரட்சிகர இயக்கங்களின் சார்பாக மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாடு .... கொட்டும் மழையிலும் இளைய தலைமுறை தோழர்களின் எழுச்சி மிகுந்த முழக்கங்களோடு மாபெரும் எழுச்சி பேரணியாய் மாநாட்டுத் திடலுக்கு வந்தது.தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் தமிழக மக்கள் முன்னணிகொடியேற்றி மாநாட்டின் நோக்க உரையாற்றி மாநாட்டை தொடங்கி வைத்தார். தமிழக மக்கள் முன்னணி யின் உறுப்பு இயக்கங்களின் தலைவர் பெருமக்கள் வழிமொழிந்து எழுச்சியுரையாற்றினர் மாநாட்டில் தோழர் நிலவழகன் தோழர் கணகுறிஞ்சி தோழர் வாலசா வல்லவன் உள்ளிட்ட தலைவர்கள் மாநாட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்து கருத்துரை நிகழ்த்தினர் இறுதியாக ஐயா. த.செயராமன் அவர்கள் இறுதியுரையாற்ற மாநாடு இனிதே வெற்றி மாநாடாக நிறைவுப் பெற்றது... காலத்தின் தேவையுணந்து தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த ஒன்றிய மாநிலங்களுக்கான உரிமைக் குரலாய் மாநாடு அமைந்தது பெருஞ்சிறப்பு..... மாநாட்டை ஒருங்கிணைத்த தமிழக மக்கள் முன்னணி தோழர்களுக்குப் பாராட்டுகளும் வாழ்த்துகளும் ..

கபிலன்

● தமிழக மக்கள் முன்னணியின் அரிய உழைப்பால் புதுக்கோட்டை நகரில் கடத்த 9.8.26 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாடு மழையின் குறுக்கீட்டினால் சற்றே காலம் தாழ்த்தி தொடங்கப்பட்டது. மாநாட்டின் தொடக்கத்தில் புரட்சிகரப் பாடல்களோடு தொடங்கி தமிழ்நாட்டின் உரிமைகளை ஒன்றிய அரசு பறிக்கிறது என்பதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் மாநாட்டின் தலைவர் தோழர் பாவெல் முன்வைத்து உரையாற்றினார். முத்தாய்ப்பாக இயற்றிய 12 தீர்மானங்கள் காலத்தின் தேவை என்பதை உணர்த்தியது. மிகச்சிறப்பு. இயற்கை ஒத்துழைப்பு நல்கியிருந்தால் இன்னும் மாநாடு சிறப்புற்றிருக்கும். பெருமுயற்சி மாநாடு நடைபெறவும் வெற்றிபெறவும் உழைத்த தோழர்கள் அனைவருக்கும் பாராட்டுகளும் பேரன்பின் நன்றியும்

செந்தீ நாகவரசன்

● மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாடு தமிழ்நாட்டு உரிமைப் பறிக்கப்படுதலுக்கு எதிராக அணிதிரள்வோம் என்னும் அறைகூவலோடு, தமிழக மக்கள் முன்னணி பெரும் முயற்சியுடன் முன்னெடுத்துப் புதுக்கோட்டையில் இந்த மாநாட்டை நடத்தியது. மாநாட்டை நடத்துவதற்கான முன்னெடுப்பின் முதல் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்தபடி, "தேர்தல் அரசியலில் பங்கேற்காத, மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரியக் கோட்பாடுகளை ஏற்கிற, தேசியஇன உரிமைகளை முதன்மையாக எண்ணி உயர்த்திப் பிடிக்கிற, இயக்கங்கள் அனைத்தும் பங்கேற்கின்றன" என்னும் அறிவிப்புக்குத் தக்கபடி அதற்குரிய முயற்சியோடு ஒருங்கிணைத்து நடத்தியது. தஞ்சாவூர் சாலையின் வட முனையிலிருந்து தொடங்கி மாநாட்டு வளாகமான நகர்மன்றம் வரை உரிமைகளை எழுச்சியோடு முழங்கியபடி பேரணி சென்றடைந்தது.

மொழிவழி மாநிலங்களை அழித்தொழித்திட அலையும் இந்திய ஒன்றியப் பாசிசத்தின் ஒடுக்குமுறையின் பிடியிலிருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்றியாக வேண்டும் என்னும் செய்தியை அழுத்தமாக வலியுறுத்திப் புதிதாக வந்திருந்த இளைஞர்களுக்கு விளங்க வைக்கக்கூடிய வகையில் நடைபெற்றது இம்மாநாடு. என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், காலத்தின் தேவை கருதி அனைத்து இயக்கங்களும் ஒருங்கிணைந்த செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவையைச் சுட்டியிருக்கிறது; செல்லும் திசைவழியை இளையோருக்குக் காட்டியிருக்கிறது; உரிமையுணர்வை ஊட்டியிருக்கிறது. ஆகவே, புதிய நம்பிக்கை அளிக்கக்கூடிய வகையில் இம் மாநாடு நடைபெற்று நிறைவுற்றது சிறப்பு!

ஒப்புரவாளன்

கேள்விக்குறியாகும் இந்திய ஒருமைப்பாடு ???

- பழ. நெடுமாறன்

கர்நாடகம் மேக்கேதாட்டு அணை கட்ட கீழ்ப்படுகை மாநிலங்களான தமிழ்நாடு, புதுச்சேரி ஆகியவற்றின் ஒப்புதல் தேவை என உச்சநீதி மன்றத் தீர்ப்பில் எந்தக் குறிப்பும் இல்லையென மத்திய நீர்வளத் துறை இணை அமைச்சர் ராஜ் பூஷண் சௌத்ரி தெரிவித்த கருத்து பெரும் எதிர்ப்பைச் சந்தித்துள்ளது.

தமிழ்நாட்டின் எல்லைக்கு மிக அருகில் ஒகேனக்கலுக்கு மேலாகச் சற்றுத் தொலைவில் மேக்கேதாட்டு அணை கட்டுவதற்கு கர்நாடகம் திட்டமிட்டுள்ளது. பெங்களூர் குடிநீருக்காக இந்தத் திட்டம் மிகவும் இன்றியமையாதது என கர்நாடகம் கூறுகிற காரணம் முற்றிலும் பொய்மையானது.

ஏற்கெனவே காவிரிநடுவர்மன்றம் 1991- ஆம் ஆண்டு சூன் 21- ஆம் நாள் தனது இடைக்காலத் தீர்ப்பில் தமிழகத்துக்கு 205 டி.எம்.சி. நீரை ஆண்டுதோறும் கர்நாடகம் அளிக்கவேண்டும் என தீர்ப்பளித்தது. இவ்வாறு அளிக்கப்படும் நீர் வாராந்திர அடிப்படையில் அமைய வேண்டும் என்று அதற்கான ஒரு திட்டத்தையும் நடுவர் மன்றம் வெளியிட்டது.

அதே ஆண்டு சூலை 6- ஆம் நாள் கர்நாடக சட்டப்பேரவை, சட்ட மேலவையும் கூடித் தேசிய தண்ணீர் கொள்கைக்கான வழிகாட்டும் விதிமுறைகள் உருவாக்கப்படும் வரை நடுவர் மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்திவைக்குமாறும், மாநிலங்களுக் கிடையேயுள்ள நீர்த்தாவா சட்டத்துக்கு சரியான திருத்தங்கள் கொண்டுவரப்படும் வரை நடுவர் மன்றம் செயல்படக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியது.

அத்துடன் கர்நாடக அரசு நிற்கவில்லை. 1991- ஆம் ஆண்டு சூலை 25- ஆம் தேதி காவிரி பாசனப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் ஓர் அவசரச் சட்டத்தைக் கர்நாடக அரசு பிறப்பித்தது. மேலும், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் கர்நாடக அரசு முறையீடு செய்தது. உச்சநீதி மன்றம் நவம்பர் 22- ஆம் நாள் கீழ்க்காணும் தீர்ப்பை அளித்தது.

கர்நாடக அரசு பிறப்பித்த காவிரிப் பாசனப் பாதுகாப்புச் சட்டம் அந்த மாநிலத்தின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டது. இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிரானது எனக் கண்டித்தது. மேலும், இடைக்காலத் தீர்ப்பு பிறப்பிக்க நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்பதையும் உச்சநீதிமன்றம் அழுத்தந்திருத்தமாகக் கூறியது. இந்திய அரசு நடுவர் மன்றத்தின் ஆணையை உடனடியாக அரசிதழில் (கெசட்டில்) பிரசுரிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

தொடக்கக் காலத்திலிருந்து காவிரிப் பிரச்னையில் தான் மேற்கொள்ள வேண்டியகடமைகளைச் செய்யாமல் இந்திய அரசு உச்ச நீதிமன்றத்துக்கு இந்தப் பிரச்னையை அனுப்பி தனது பொறுப்பைத் தட்டிக்கழித்தது, நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் எனத் தமிழகம் வாதாடியபோது, பல ஆண்டுக்காலம் அதற்குச் செவி சாய்க்காமலேயே இந்தப் பிரச்னையை ஆறப் போட்டது.

இறுதியில் உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பியது. உச்சநீதிமன்றம் நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்த பிறகே நடுவர் மன்றத்தை அமைக்க இந்திய அரசு முன்வந்தது. நடுவர் மன்றம் இடைக்கால ஆணை வழங்கிய பிறகு அதைச் செயல்படுத்த வேண்டிய இந்திய அரசு மறுபடியும் உச்சநீதிமன்றத்துக்கே அதை அனுப்பியது. உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணைப்படி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அரசிதழில் (கெசட்டில்) பிரசுரிக்காமல் இந்திய அரசு தாமதப்படுத்தியபோது, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்திய அரசில் இணை அமைச்சர் பொறுப்பு வகித்த வாழப்பாடி கூ. இராமமூர்த்தி தனது அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார்.

1993- ஆம் ஆண்டு சூலை மாதம் வரை நடுவர் மன்றம் அளித்த இடைக்கால தீர்ப்பை மதிக்கவோ, அதன்படி தண்ணீர் தரவோ கர்நாடக அரசு பிடிவாதமாக மறுத்துவிட்டது. தமிழகத்தின் சார்பில் பலமுறை இந்திய அரசை வற்பு றுத்திய போதிலும், இந்திய அரசு எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இந்திய அரசின் இந்தப் போக்கைக் கண்டித்து தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா சூலை 18- ஆம் நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டார். சூலை 21- ஆம் தேதி வரை நான்கு நாள்கள் அவர் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதம் நாடெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்திய அரசு இவ்விதம் நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவாக அப்போதைய பிரதமர் பி.வி. நரசிம்மராவ் மத்திய பாசனத் துறை அமைச்சரான வி.சி.கக்காவைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பினார். அவரும் சென்னைக்கு விரைந்து வந்து முதல்வர் ஜெயலலிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு மீண்டும் பெங்களூரு சென்று கர்நாடக முதல்வருடன் பேச்சு நடத்தினார்.

பிறகு காவிரிப் பிரச்னை சம்பந்தமாக இரண்டு குழுக்களை அமைக்கப் போவதாக அவர் அறிவித்தார். காவிரியில் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவைக் கண்காணிக்க ஒரு குழுவையும், அது நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்று ஆராய மற்றொரு குழுவையும் நியமிக்கப் போவதாக அவர் அறிவித்தார். இந்த வாக்குறுதியை ஏற்று முதல்வர் ஜெயலலிதா தனது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்

ஆனாலும், இந்த அறிவிப்பைக் கர்நாடக அரசு ஏற்றுக்கொள்ள மறுத்தது. மீண்டும் நடுவர் மன்றத்தில் தமிழகம் முறையிட்டது. டிசம்பர் 19- ஆம் நாள் நடுவர் மன்றம் உடனடியாகத் தமிழ்நாட்டுக்கு 11 டி.எம்.சி. தண்ணீரை அளிக்குமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட்டது.

இந்த உத்தரவையும் கர்நாடகம் ஏற்றுக்கொள்ள மறுத்தது. உச்சநீதிமன்றம் தலையிட்டு இந்தப் பிரச்னையில் உடனடியாக ஆவன செய்யுமாறு இந்தியப் பிரதமருக்கு ஆணையிட்டது. பிரதமராக இருந்த பி.வி. நரசிம்ம ராவ் தமிழ்நாட்டுக்கு உடனடியாக 6 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்துவிடுமாறு கர்நாடகத்துக்கு ஆணையிட்டார். மேலும், இரு மாநிலங்களிலும் நிலவும் நிலைமைகளை ஆராய நிபுணர் குழு ஒன்றையும் அமைத்தார்.

உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு நீர்த்துப்போகும் வகையிலேயே பிரதமர் பி.வி. நரசிம்மராவ் நடந்துகொண்டாரே தவிர, 11 டி.எம்.சி. நீரைத் திறந்துவிட ஆணை பிறப்பிக்கவில்லை.

கர்நாடகத்தின் அப்போதைய முதல்வராக இருந்த தேவெகௌடா, நெருக்கடியான நிலைமைக்கு உள்ளானார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, நடுவர் மன்ற நீதிபதிகளுக் கெதிராக வழக்கு தொடுத்தார். நடுவர் மன்ற நீதிபதிகள் தமிழகக் காவிரிப் பகுதிகளை நேரடியா கப் பார்வையிட்ட வேளையில், சில கோயில்களுக்கு அவர்கள் வழிபடச் சென்றபோது, பரிவட்ட மரியாதைகள் அளிக்கப்பட்டன.

இதை வேறுவிதமாகத் திரித்து தமிழ்நாட்டில் விலையுயர்ந்த பரிசுகளை நடுவர் மன்ற நீதிபதிகள் பெற்றிருப்பதால், அவர்கள் நடுநிலை தவறி விட்டார்கள். எனவே, காவிரி வழக்கை அவர்கள் விசாரிக்கக் கூடாது என உயர்நீதி மன்றத்தில் அவர் வழக்குத் தொடுத்தார். அவர் முதல்வரான பிறகும், இந்த வழக்குத் திரும்பப் பெறப்படவில்லை. பிறகு, அவர் பிரதமராகவும் ஆகிவிட்டார். இந்திய அரசுத் துறைகளில் ஒன்றான நீர் ஆதாரங்களும் அவற்றின் நியாயமும் என்பதின் கீழ்தான் நடுவர் மன்றம் இயங்கி வருகிறது.

எனவே, நிர்வாகத் துறையின் தலைவராக உள்ள பிரதமர் நடுவர் மன்றத் தலைவரின் மீது தொடுத்துள்ள வழக்கு அவருக்கு தர்மசங்கட மான நிலையை தோற் றுவித்தது. இந்த வழக்கைத் தேவெகௌடா திரும்பப் பெறுவதன் மூலம்தான் இந்த நிலையை மாற்ற முடியும். அதற்கான அறிகுறி தெரியாத காரணத்தால் நடுவர் மன்றத் தலைவரான சித்ததோஷ் முகர்ஜி தனது பதவியிலிருந்து விலகினார். காவிரி நடுவர் மன்ற விசாரணை சுமார் 75 சதவீதம் முடிவடைந்துவிட்டது. இந்த நிலையில், புதிய தலைவர் நியமிக்கப்பட்டு, அவர் கடந்த ஐந்தாண்டு நடவடிக்கைகளை முழுவதுமாகப் புரிந்துகொண்டு விசாரணையை நடத்தி முடிக்க மேலும் பல ஆண்டுகளாகும். நடுவர் மன்றம் அமைப்பதையே கடுமையாக எதிர்த்து வந்த கர்நாடகம், இப்போது நடுவர் மன்றத்தையே சீர்குலைத்துவிட்டது.

கர்நாடகத்தின் இந்த அடாவடிப் போக்குக்குக் காரணம் என்ன? என்பதை அறிய வேண்டுமானால் பழைய வரலாறுகளை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 1890- ஆம் ஆண்டு மைசூர் சமஸ்தான அரசு காவிரியிலும் மற்றும் தங்கள் எல்லைக்குள் அமைந்த ஏனைய படுகைகளிலும் புதிய பாசன வசதிகளை விரிவாக்க முனைந்தது.

1892- ஆம் ஆண்டு வரை இது குறித்து இரு அரசுகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் கடிதப் போக்குவரத்துகள் ஆகியவற்றின் விளைவாகச் சென்னை மாகாண அரசின் முன் அனுமதியின்றி தங்கள் பகுதியில் புதிய பாசன வசதி அல்லது பாசன விரிவாக்கப் பணிகளை மைசூர் மேற்கொள்ளக் கூடாது என்பது பற்றிய விதிகள் வகுக்கப்பட்டு இரு அரசுகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்டன. இந்த விதிகளின் தொகுப்பே 1892- ஆம் ஆண்டு உடன்பாடாகும்.

1892- ஆம் ஆண்டு உடன்பாட்டின்படி மைசூர் அரசு காவிரியிலோ அல்லது அதில் வந்து கலக்கும் துணை நதிகளிலோ புதிய பாசன அணை கட்ட விரும்பினால், அந்தப் பணி தொடங்குவதற்கு முன்பாக முழுவிவரங்களையும் சென்னை மாகாண அரசுக்கு அனுப்பி வைத்து அதன் முன்னிசைவினைப் பெற வேண்டும் என இந்த உடன்பாட்டில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு முன் இசைவு தருவது பற்றி இரு அரசுகளுக்கிடையேயும் கருத்து வேறுபாடு ஏற்பட்டால், அந்தப் பிரச்னையில் இரு அரசுகளாலும் ஏற்கப்படும் நடுவர்கள் அல்லது இந்திய அரசின் தீர்வுக்குக் கட்டுப்படவேண்டும்.

1924 பிப்ரவரி 18- ஆம் நாள் இரு அரசுகளுக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி...

அ. சென்னை அரசு 95.50 டி.எம்.சி. கொள்ளளவுக்கு மேட்டூர் அணையைக் கட்டிப் புதிதாக 3.01 லட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசனம் அளிக்கலாம்.

ஆ. மைசூர் அரசு 1892- ஆம் ஆண்டு உடன் பாட்டின் விவரணை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காவிரி மற்றும் அதன் கிளை நதிகளிலும் மொத்தத்தில் 45 டி.எம்.சி. கொள்ளளவுக்குப் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டுப் புதிய அணைகளைக் கட்டி 1.10 லட்சம் ஏக்கர்களுக்குப் பாசனம் அளிக்கலாம்.

1. 1924 உடன்பாட்டில் இணைக்கப்பட்ட கிருஷ்ணராஜசாகரில் நீர் தேக்குவதற்கான விதி முறைகளின்படி சென்னை மாகாணத்துக்குச் சேரவேண்டிய நீரின் அளவு குறைந்துவிடாதபடி இந்த அணைகளில் நீர் தேக்குவது அமைய வேண்டும்.

2. உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பின்பற்றப்படுவதைச் சென்னை அரசு உறுதி செய்வதற்கு ஏதுவாக அத்தகைய நீர்த்தேக்க திட்டங்கள், அவற்றில் தேக்கி வைக்கும் நீரின் அளவு ஆகியவை குறித்த முழு விவரங்களையும் மைசூர் அரசு சென்னை அரசுக்கு அளிக்க வேண்டும்.

3. சென்னை அரசு தனது மாநில எல்லைக்குள் காவிரியின் துணை நதிகளில் புதிய பாசன அணைகளை அமைத்துக் கொள்ளலாம். அதன்படி பவானி, அமராவதி, நொய்யல் நதிகளில் அணைகள் அமைத்தால் அதற்கு ஈடாக அவற்றின் கொள்ளளவில் 60 சதவீதத்துக்கு மேற்படாதவாறு ஓர் அணையைத் தனது எல்லைக்குள் காவிரியின் துணை நதிகள் ஒன்றில் அமைத்துக் கொள்ள மைசூர் அரசுக்கு உரிமை உண்டு.

ஆனால், இந்தப் புதிய அணையில் நீர் தேக்குவது இந்த உடன்பாட்டின்படி சென்னை அரசுக்கும் மைசூர் அரசுக்கும் கிடைக்க வேண்டிய நீரின் அளவையோ அல்லது இந்த உடன்பாடு செய்துகொண்ட 50 ஆண்டுகளுக்குப் பிறகு உடன்பாட்டின் சில பகுதிகள் மறுபரிசீலனைக்கு வரும்போது மேலும் பகிர்ந்துகொள்ள எதிர்பார்க்கப்படும் உபரிநீரின் பங்கீட்டை எந்த வகையிலும் குறைக்கவோ அல்லது பாதிக்கவோ கூடாது.

1924- ஆம் ஆண்டு உடன்பாட்டில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் போக, இதர ஏற்பாடுகள் தொடர்பாக 1892- ஆம் ஆண்டு உடன்பாட்டின் விதிமுறைகளே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்றும் இந்த உடன்பாடு வலியுறுத்துகிறது.

எனவே, 1924 உடன்பாட்டின் 10(1) (3) வரையிலான விதிகள் நிரந்தரமானவையாகும். அவை எக்காலத்திலும் மறு ஆய்வுக்கோ மாறுதலுக்கோ உட்பட்டவையல்ல.

சென்னை மாகாண அரசு மற்றும் மைசூர் அரசு ஆகியவற்றுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட இந்த உடன்பாடு உருவாவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள தத்துவம் என்னவென்றால்,

அ. இந்த ஆற்றுப்படுகைகளில் வேறு எந்த ஒரு பகுதியிலும் புதிய திட்டம் எதையும் மேற்கொள்வதற்கு முன்னர் இப்படுகையின் பல பகுதிகளிலுள்ள தற்போதைய பாசனத்தின் தேவை முழுமையாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

ஆ, இந்தப்படுகையில் மேற்கொண்டுபாசன விரிவாக்கத்துக்குக் கிடைக்கக்கூடிய நீர் எத்தகைய பாகுபாடும் இன்றி நியாயமான முறையில் பங்கீடு செய்துகொள்ளப்படும்.

தற்போது தமிழகத்தில் பாசனவசதி பெறுகிற நிலங்களில் பெரும்பகுதி காவிரி சமவெளிப் பகுதியில் அமைந்துள்ளது. எனவே, இந்தப் பாசனத்தின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே கிருஷ்ணராஜசாகர் நீர் தேக்கத்துக்கு நாள்தோறும் வரும் நீரை இவ்விரு மாநிலங்களும் அன்றன்றைக்கே எவ்வாறு பகிர்ந்து கொள்ளவேண்டும்?, சென்னை மாநிலத்துக்கு எவ்வளவு நீர் விடப்படவேண்டும்?, மைசூர் அரசு கிருஷ்ணராஜசாகர் நீர்த்தேக்கத்தில் எந்தளவுக்கு நீரைத் தேக்கி வைத்துக்கொள்ளலாம்? என்பதற்கான முறையை இவ்விதிகளில் திட்ட வட்டமாகக் குறிப்பிடப்பட்டு.

மொழிவழியாக மாநிலங்கள் திருத்தியமைக்கப்பட்ட பின்னர், கர்நாடகம் காவிரிப் பகுதியில் புதிய திட்டப் பணிகளை மேற்கொள்ள விரும்பியது. கபினி, ஹேமாவதி, ஹேரங்கி ஆகிய ஆறுகளில் 45 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட அணைகளைக் கட்டிக்கொள்ள கர்நாடகம் திட்டமிட்டது. தனது உரிமைகளும், நலன்களும் இந்தத் திட்டங்களால் பாதிக்கப்படும் எனத் தமிழகம் எதிர்ப்புத் தெரிவித்தது. புதிய அணைகள் கட்டுவதைத் கர்நாடகம் நிறுத்தி வைக்க ஆணை விடுமாறு உச்சநீதிமன்றத்தைத் தமிழ்நாடு வேண்டிக்கொண்டது.

இந்திய அரசு தாக்கல் செய்த பதில் வாக்குமூலத்தில் சட்டப்படி இனியும் பேச்சுகளால் பலனில்லை என்ற முடிவுக்கு ஒன்றிய அரசு வந்தால்தான், நடுவர் குழுவை அமைக்க வாய்ப்பு ஏற்படும் என்றும்தான் அந்த முடிவுக்கு இன்னும் வரவில்லை என்றும் பிரச்சனையை மேலும் தாமதப்படுத்தியது.

1971- ஆம் ஆண்டின் இறுதியில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனாலும், கர்நாடக அரசின் அணைத்திட்டங்களை உடனடியாக நிறுத்தி வைக்குமாறு உத்தரவு வழங்க அது மறுத்துவிட்டது.

1972- ஆம் ஆண்டு இந்திய பிரதமர் இந்திரா காந்தியிடம் தமிழக முதல்வர் கருணாநிதி இப்பிரச்னை குறித்துப் பேசினார். தமிழக அரசு தொடுத்துள்ள வழக்கை திரும்பப் பெற்றால், பேச்சுகளை மீண்டும் நடத்தி தீர்வுகாண உதவுவதாக இந்திரா காந்தி அளித்த வாக்குறுதியை நம்பி தமிழ்நாடு அரசு மீண்டும் தாக்கல் செய்யும் உரிமையுடனும், நீதிமன்றத்தின் ஒப்புதலுடனும் வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் வைக்கப்பட்டது.

இந்தியாவின் அரசியல் சூழல் அவ்வேளையில் முற்றிலுமாக மாறியிருந்தது. தமிழ்நாட்டில் தி.மு.க. அரசும், கர்நாடகத்தில் இந்திரா காங்கிரஸ் அரசும், கேரளத்தில் கம்யூனிஸ்ட்- இ.காங்கிரஸ் கூட்டாட்சியும் இருந்தன. இந்த மூன்று மாநிலங்களிலும் இருந்த ஆட்சிகள் இந்திரா காந்திக்கு ஆதரவான ஆட்சிகளே ஆகும். இம்மூன்று மாநிலங்களிலும் முதல்வர்களாக இருந்த கருணாநிதி, தேவராஜ் அர்சு, அச்சுத மேனன் ஆகியோர் 1971- ஆம் ஆண்டு தேர்தலில் பிரதமராக இந்திரா காந்தி வரவேண்டும் என்பதற்காகப் பேராதரவு அளித்தார்கள். எனவே, இந்தப் பிரச்னையைத் தீர்க்க இந்திரா காந்தி உண்மையிலேயே விரும்பியிருந்தால் அந்தநேரத்தில் தீர்த்து வைத்திருக்க முடியும். ஆனால், அந்த முயற்சியில் அவர் அக்கறை காட்டவில்லை.

1972- ஆம் ஆண்டு மே மாத இறுதியில் தில்லியில் மூன்று மாநில முதல்வர்கள் பேசியதில் மூன்று மாதங்களுக்குள் அறிக்கையை அளிக்கவும் அதுவரை எந்த மாநிலமும் புதிய பயன் முறைகளை உருவாக்கக்கூடாது எனவும் முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டறிக்கையில் மூன்று மாநில முதல்வர்களும் இந்திய அமைச்சரும் கையொப்பமிட்டார்கள். ஆனால், கர்நாடகம் இதை மீறிப் புதிய பாசனத் திட்டங்களை வேகமாக நிறைவேற்றத் தொடங்கியது.

காவிரி உண்மை அறியும் குழு தனது அறிக்கையை 1972- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மத்திய அரசுக்கு அனுப்பியது. 1973- ஆம் ஆண்டு தில்லியில் மூன்று மாநில முதல்வர்களும், மத்திய பாசனத் துறை அமைச்சரும் உண்மை அறியும் குழுவின் அறிக்கையை ஆராய்ந்தார் கள். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிளக்கங்கள் சரியானது என ஒப்புக்கொண்டனர். 1973- ஆம் ஆண்டு அக்டோபரில் தில்லியிலும், 1974- ஆம் ஆண்டு ஷூன் மாத இறுதியில் சென்

னையிலும் நடைபெற்ற முதல்வர்கள் கூட்டத் தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

காவிரிப் படுகையில் புதிய பாசனங்கள் பழைய பாசனங்கள் எல்லாம் சேர்ந்து சராசரியாக 1,25,000 கோடி கன அடி அளவு தண்ணீர் தேவைப்படுகிறது. ஆனால், கிடைக்கும் தண்ணீரின் அளவோ 74,000 கோடி கன அடி மட்டுமே. இதில் கர்நாடகம் புதிய பாசனத் தேவைகள் உள்பட 44,000 கோடி கன அடி தண்ணீரையும், கேரளம் புதிய பாசனத் தேவைகள் உள்பட 17,000 கோடி கன அடி தண்ணீரையும் எடுத்துக்கொள்ள திட்டமிட்டன.

இவை எடுத்துக்கொண்ட பிறகு மீதமாகும் நீரின் அளவு 13,000 கோடி கன அடி தண்ணீ மட்டுமே. தமிழகத்துக்கு இதுதான் கிடைக்கும். இத்தனை ஆண்டுகாலமாகக் கர்நாடகத்திலிருந்து மேட்டூர் அணைக்கு 36,000 கோடி கன அடி நீர் வந்துகொண்டிருக்கிறது. ஆனால். 13,000 கோடி கன அடிநீர் அடி மட்டுமே கர்நாடகம் தருமானால், தமிழ்நாட்டில் காவிரிப் பாசன நிலத்தின் மொத்தப் பரப்பனவு 28.21 லட்சம் ஏக்கரில் 12.5 லட்சம் ஏக்கர் பாசனத்துக்கு நீர் கிடைக்காமல் தரிசாகும்.

தமிழக உழவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். 25,000 ஹெக்டேர் நிலத்தில் விளைவிக்கப்பட்ட குறுவைப் பயிர், 4295 ஹெக்டேருக்கும் குறைவான நிலத்திலேயே பயிரிடப்பட்டு வருகிறது.

உலகப் புகழ்பெற்ற வேளாண் விஞ்ஞானி மறைந்த எம்.எஸ். சுவாமிநாதன், உச்சநீதி மன்றத்தில் காவிரி வழக்கு நடைபெற்றபோது, அதற்கு முன்பாகக் கீழ்க்காணுமாறு வாக்குமூலம் அளித்தார்.

தமிழ்நாட்டுக்குக் காவிரி ஒன்றே வற்றாத பேராறாகும். கர்நாடகத்தில் காவிரி மட்டுமின்றி கிருஷ்ணா, துங்கபத்ரா, கோதாவரி, அதன் கிளை நதிகள் மற்றும் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள் பலவும் உள்ளன. தமிழ்நாட்டின் 34 சதவீதம் நிலப்பகுதி காவிரிப் படுகை யில் அமைந்துள்ளது. கர்நாடகத்தின் நிலப்பகுதியில் காவிரிப் படுகையின் பரப்பு 17 சதவீதம் மட்டுமே ஆகும்.

தமிழ்நாட்டில் ஆற்றுப்பாசன நிலத்தில் 60 சதவீதம் காவிரி ஆற்றையே நம்பியுள்ளது. தமிழ்நாடு தனது உணவு தானிய உற்பத்திக்குக் காவிரியையே பெரிதும் சார்ந்துள்ளது எனக் கூறினார்.

காவிரிப் பிரச்னை உருவான காலத்திலிருந்து 9 பிரதமர்கள் பதவியில் இருந்திருக்கிறார்கள். நடுவர் மன்றம் உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகளை மதிக்கக் கர்நாடகம் மறுத்த போது, இவர்களில் யாரும் முன்வந்து தமிழகத்திற்கு நீதி வழங்கத் தவறிவிட்டார்கள்.

காவிரிப் பள்ளத்தாக்கு அமைப்பு அமைக்க வேண்டும் எனத் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று முதல்வர்களும் ஒப்புக்கொண்டபோதுகூட அவ்வாறு செய்ய பிரதமர் இந்திரா காந்தி முன்வரவில்லை. காவிரிப் பள்ளத்தாக்கு அமைப்பு அமைக்கப் படுமானால், இந்த மூன்று மாநிலங்களிலும் உள்ள காவிரி மற்றும் துணை நதிகள் ஆகியவற்றில் உள்ள அணைகள் யாவும் அந்த அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்பின்படி காவிரிப் பள்ளத்தாக்கு அமைப்பு உடனுக்குடன் செயல்பட்டிருக்கும். தமிழ்நாட்டுக்குத் தேவையான தண்ணீர் கிடைத்திருக்கும்.

தமிழ்நாட்டில் அகில இந்தியக் கட்சிகளான காங்கிரஸ், சனதா, பா.ச.க., இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் போன்றவை ஒருகாலத்திலும் ஆட்சிக்கு வர முடியவில்லை. மாநிலக் கட்சிகளே தமிழ்நாட்டில் ஆட்சியில் உள்ளன. அவற்றின் தயவில்தான் இந்த அகில இந்தியக் கட்சிகள் சட்டப்பேரவைக்கோ, நாடாளுமன்றத்துக்கோ தேர்ந்தெடுக்கப்பட முடியும் என்ற நிலைமை இங்கு உள்ளது. ஆனால், கர்நாடகத்தில் காங்கிரஸ், சனதா, பாரதிய சனதா போன்ற கட்சிகள் ஆட்சியில் மாறிமாறி அமர்ந்துள்ளன. மாநிலக் கட்சிகள் எதுவும் அங்கு ஆட்சியைக் கைப்பற்ற இயலவில்லை. எனவே, அகில இந்தியக் கட்சிகளின் தலைவர்கள் தங்கள் கட்சிகளின் எதிர் காலம் கர்நாடகத்தில் பாதிக்கப்படக்கூடாது எனக் கருதுகிறார்கள். எனவே, காவிரிப் பிரச்னையில் தமிழ்நாட்டின் நியாயமான உரிமைகளை அவர்களால் எளிதில் புறந்தள்ள முடிகிறது.

கர்நாடகத்தின் கயமைப் போக்கைக் கண்டிக்கவோ, தமிழகத்துக்குச் சட்டப்படி உள்ள உரிமைகளை மதிக்கவோ அகில இந்திய கட்சிகளைச் சேர்ந்த தேசியத் தலைவர்கள் தவறிவிட்டனர். தேசியத் தலைவர்களுக்கு இருக்கவேண்டிய தகைமை அறவே இல்லை. கர்நாடகத்தின் அடாவடிப் போக்கின் விளைவாகத் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் விளைவதைச் சுட்டிக் காட்டித் திருத்தும் நெஞ்சுரம் அகில இந்தியக் கட்சித் தலைவர் ஒருவருக்குக்கூட இல்லை

(தினமணி நாளிதழில்
ஆகத்து 17 ஆம் நாள் வெளிவந்த கட்டுரை) ●

தொ.ப.வும் சாய் பல்லவியும்..

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் 'ராமாயணம்' ஃபீட்ஸால் நிரம்பி வழிந்தது முகநூல்.

தொ.பரமசிவம் ஐயா 'அறியப்படாத தமிழகம்' நூலில் சொல்லுவார், "என்னதான் கம்பராமாயணத்தைக் கொண்டாடுகிற மண் என்றாலும் தமிழர்கள் கிருஷ்ண வழிபாடு அளவுக்கு இராமனைக் கொண்டாடுவதில்லை". 'சாப்பாட்டு இராமன்' போன்ற கேலிச் சொற்களை மேற்கோள் காட்டும் அவர், தமிழர்களின் கிருஷ்ண வழிபாட்டில் உள்ள நுட்பத்தைச் சொல்கிறார்.

கிருஷ்ணன் எளிய பின்புலம் கொண்ட, ஆசாபாசங்கள் நிறைந்த நம்முள் ஒருவராகத் தெரிகிற அதே நேரம், இராமன் அரச வாரிசு என்றும், இருவரது கதைகள் முன் வைக்கும் வாழ்வனுபவங்களையும் சுட்டிக்காட்டுகிறார். இராமாயணத்தில் கூடக் கம்பர், வால்மீகியை அப்படியே மொழிபெயர்க்காமல் பல இடங்களில் நம் அறம் சார்ந்து மாற்றி இருப்பதாக முன் வைக்கிறார். கம்பரே முயன்றும் அவர் தமிழ்தான் மனங்களை ஆள்கிறதேயன்றி இராமனால் தமிழ் நெஞ்சங்களை வெல்ல முடியவில்லை. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி முதல் பாரதி வரை கொண்டாடுவது கண்ணனைத்தான். அந்தப் படையெடுப்பின் நீட்சியாகவே இப்போது வெளிவர இருக்கும் ராமாயணத்தையும் கருத வேண்டி இருக்கிறது.

தமிழ்ப் பழங்குடி இன அழகி, நடிப்பால், நடனத்தால் உள்ளம் கொள்ளை கொண்டவர் என்பதை பான்- இந்தியப் படமான 'அமரன்' மூலமாகவும் 'ஷியாம் சிங்க ராய்' மூலமாகவும் ஏற்கெனவே நிறுவிக் காட்டியவர் சாய் பல்லவி. அதிக ஒப்பனைகள் தேவையின்றி ஜொலிக்கும் அவரது இயல்பான அழகு வனவாச சீதைக்குத் தோது என்பதைத் தாண்டியும் இராமாயணத்தின் முக்கியப் பெண் பாத்திரமான, இரக்கத்துக்குரிய கதாபாத்திரத்துக்கு அவரைத் தேர்வு செய்வதன் மூலம் தமிழ் ரசிகர்களிடையே சீதையைக் கடத்திவிட முடியும் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். வட இந்திய இணைய வெளியெங்கும் சீதைக்கு சாய் பல்லவி சரியான தேர்வல்ல என்கிற பொருமல்களும் தென்பகுதியின் உற்சாக வரவேற்பும் அதிக அவதானிப்பு இன்றியே தெள்ளென விளங்குகின்றன.

மகுடம் வைத்தது போல இராவணனாக யஷ். கச்சிதமான தேர்வு! கருப்பு உடையில் கம்பீரமான இராவணனைக் கண்ட நொடி ஆர்ப்பரிக்கத் தொடங்கிவிட்டது இராவணக்கூட்டம். கம்பீரமான மீசையும் தமிழ் அடையாளமுமாகத் திரையில் யஷ் தடம் பதிக்கும்தோறும் அதிர்கிறது இணையவெளி. சீதையை ராவணன் சிறையெடுக்கும்போது தென்னிந்திய சனங்கள் விசிலடிப்பார்களா எனப் பகடி செய்யும் வட இந்தியக் கேலிப்பதிவுகளை எளிதில் புறந்தள்ள முடியாது.

ஏதேதோ வடிவில் ராமை நுழைக்க முயன்றுவிட்டு, கொல்லைப்புறமாகத் தென்னிந்தியாவில் இராம வழிபாட்டை உள்நுழைக்கும் முயற்சியாகவே இதைக் காண வேண்டியிருக்கிறது. இனிப்பு தடவிய மாத்திரை போல என்பதை விட வைக்கோல் கன்றுக்குட்டியைக் காட்டிப் பால் கறப்பதைப் போல என்றால் சரியாக இருக்கும்.

கம்பீரமான திராவிட முகத்தை இராவணனாக முன்னிறுத்துவதன் மூலம் இராமாயணத்தை வெகுவாகக் கொண்டாடாத மண்ணில் ஏதேனும் ஒரு பாத்திரத்தை, அது அவர்களைப் பொருத்தவரை வில்லனாகவே இருந்தாலும் அவனையாவது நாம் கொண்டாடுவதன் மூலம் நம்மை அந்தக் கதைக்குள் இழுக்க முயல்கிறார்கள். அந்தக் கதையையே கவனிக்க மறுக்கும் கூட்டத்தை, அவர்கள் முன்னிறுத்தும் ராமனைப் புறந்தள்ளி, இராவணனைக் கொண்டாடுவோம் என்கிற முடிவிலாவது அந்தக் கதைக்குள் ஒரு பாத்திரமாக நம்மை உணரச் செய்யும் அவர்களுடைய உத்தி கொஞ்சம் வேலை செய்வதாகவே தெரிகிறது. இது ஒரே தேசம், ஒரே வழிபாடு எனும் இடத்துக்கு நாளை அழைத்துச் செல்லும் அபாயம் இருக்கிறது?!

இராவணனைக் கொண்டாட நமக்கு எத்தனையோ வழிகள் இருக்கிறபோது அவர்கள் படத்தில் முன்வைக்கும் இராவணனை நாம் புறக்கணிக்க வேண்டியது அவசியமாகிறது.

- மைதிலி கசுத்தூரிரங்கன்

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம் 2026

பேராசிரியர் **த.செயராமன்**
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

அடாதசெயலைச்செய்கிறது மோடி அரசு!
மாநில உரிமைகளை அடித்து நொறுக்குகிறது!
கூட்டாட்சி முறைமையைக் காலில் போட்டு மிதிக்கிறது!
எள்முனை அளவு கூட மாநில உரிமையை மதிக்கவில்லை!
ஒவ்வொரு தேசியஇனத்தின் உரிமையையும் பறிக்கிறது!

மக்களின் கைகளைக்கட்டி, மாநிலங்களின் கைகளைக்கட்டி, கனிம வளங்களைக் கார்ப்பரேட்டுகள் களவாடிச்செல்ல, கதவுகளைத் திறந்துவிடுகிறது மோடி அரசு!

கனிமநிலம் மாநிலத்திடம் இருக்கும்! ஆனால் அந்தக் கனிமத்தின் மீது வரி விதிக்க மாநில அரசுக்கு உரிமை இல்லை! ஒன்றிய அரசு அனுமதித்தால்தான் வரி விதிக்க முடியும்!

ஒரு புதிய சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் விவாதமே இல்லாமல் நிறைவேற்றி இருக்கிறது மோடி அரசு!

12.08.2026 அன்று, ஒன்றிய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ஜி. கிஷன் ரெட்டி, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1957- ஐ மேலும் திருத்துவதற்கான மசோதாவை நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். மக்களவையில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்து கொண்டிருந்தாலும், விவாதமே இல்லாமல் அந்த சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஒன்றிய அரசின் பார்வையில், இந்த மசோதாவின் நோக்கம், இந்தியாவின் சுரங்கத் துறையை "மேலும் திறன்மிக்கதாகவும், முதலீட்டுக்கு உகந்ததாகவும் மாற்றுவதுடன், நாட்டில் அதிகரித்து வரும் முக்கியமான கனிமங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் சுரங்கத் துறையைத் தயார்படுத்துவதும் ஆகும்."

கெட்ட செயலை நல்ல வார்த்தைகளில் விவரிக்க இந்திய ஒன்றிய அரசுக்குத் தெரியும். கனிமம் இல்லாத நிலம் ஏது? ஒவ்வோர் இடத்திலும் ஏதாவது ஒரு கனிமம் நிலத்தில் புதைந்துதான் இருக்கிறது. இவற்றை எடுத்துக் கொள்ள, தனியார் நிறுவனங்களுக்கும் பன்னாட்டு கார்ப்பரேட்டுகளுக்கும் இந்திய ஒன்றிய அரசு உரிமை வழங்கியிருக்கிறது.

இதன் பொருள் என்ன?

கனிம நிலங்கள் மீதான உரிமையை மாநிலங்களிடமிருந்து பறித்து, பன்னாட்டுக் கார்ப்பரேட்டுகள் எந்தத் தடையும் இல்லாமல் கனிமங்களை அள்ளிச் செல்ல ஏற்ற வகையில் (முதலீட்டாளர்களுக்கு உகந்த வகையில்) விதிமுறைகளைத் திருத்தி விடுவது, கனிம நிலங்கள் மீதான வரி விதிக்கும் அதிகாரத்தை மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்து பிடுங்கி ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது- என்பதுதான் இந்திய அரசின் நோக்கம்.

2019 ஆம் ஆண்டுஅமெரிக்கா முக்கிய கனிமங்கள் (critical minerals) என்று ஒரு பட்டியலை அறிவித்தது.

2021 ஆம் ஆண்டு இந்த கனிமங்கள் பற்றி இந்தியாவும் அமெரிக்காவும் ஒப்பந்தம் செய்து கொண்டன.

2023- இல் கொண்டுவரப்பட்ட சுரங்க மற்றும் கனிம சட்டத் திருத்தம் மூலம், லித்தியம் போன்ற முக்கிய மற்றும் சிக்கலான கனிமங்களை ஆய்வு செய்ய தனியார்துறைக்கு முழுமையான உரிமங்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டது.

அதைத்தொடர்ந்து அணுக் கனிமத்தைக் கண்டறிய தனியார் நிறுவனங்களுக்கு இந்தியா அனுமதி அளித்தது.

பன்னாட்டு பெருமுதலாளிகள் மாநிலங்களுக்குள் புகுந்து, நிலத்தை அகழ்ந்து கனிமங்களை, குறிப்பாக அணுக்கணிமத்தை, கண்டறிந்து அள்ளிச் செல்வதை மாநில அரசுகள் தடுத்து விடாமல் இருப்பதற்காக இப்போது இந்த சட்டத் திருத்தம் செய்யப்படுகிறது.

சட்டத்திருத்தம்

சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல்) திருத்த மசோதா - 2026- ஐ மக்களவையில் தாக்கல் செய்து, எந்த விவாதமும் இல்லாமல் நிறைவேற்றி இருக்கிறது மோடி அரசு. Mines and Minerals Development and Regulation Act of 1957- என்ற சட்டம் கனிமங்களை ஒழுங்குமுறை செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் ஒன்றிய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்தச் சட்டத்தில் மூன்று இடங்களில் திருத்தி இருக்கிறது, மேலும் ஒரு புதிய பிரிவைச் சேர்த்திருக்கிறது.

திருத்தங்கள்:

(1) மசோதாவின் பிரிவு-2 - இல் செய்யப்பட்ட திருத்தம், சுரங்கங்கள் மட்டுமின்றி, கனிமங்கள் உள்ள நிலத்தையும் ஒழுங்குபடுத்த கூடுதல் அதிகாரத்தை ஒன்றிய அரசுக்கு அளிக்கிறது. ஒன்றிய அரசின் அதிகார வரம்பு இந்த திருத்தத்தால் அதிகரிக்கப்படுகிறது. சுரங்கங்களின் ஒழுங்குமுறை என்பதுடன், " மற்றும் கனிமங்கள் கொண்ட நிலங்கள்" என்ற சொற்கள் இணைக்கப்பட்டுள்ளது. சுரங்கம் மட்டுமல்ல, கனிமங்கள் உள்ள நிலமும் ஒன்றிய அரசின் அதிகாரத்துக்கு கட்டுப்பட்டது என்கிறது.

(2) அது போன்று பிரிவு-3 சட்டத்தின் வரையறைகள் பற்றிப் பேசுகிறது. இதில் புதிய உட்பிரிவாகக் "கனிமங்கள் கொண்ட நிலம்" என்பது சேர்க்கப்பட்டுள்ளது.

(3) பிரிவு-13 சுரங்க குத்தகைகள் மற்றும் கனிமங்கள் தொடர்பான விதிகளை உருவாக்க மத்திய அரசுக்கு கூடுதல் அதிகாரங்கள் அளிக்கும் வகையில் திருத்தப்பட்டுள்ளது. அதன்படி, 'நிலம்' என்பது மாநில அரசின் அதிகாரப்பட்டியலில் (கூறு- 18) இருந்தாலும், ஒன்றிய அரசின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுதான் மாநிலங்கள் கனிம நிலங்கள் மீது வரி விதிக்க முடியும்.

புதிய பிரிவு 9-பீ:

அது மட்டுமின்றி, புதிதாக ஒரு பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. 9- பீ என்ற புதிய பிரிவு, மாநில அரசுகள் தன் சுய முடிவின்படி, தன்னிச்சையாகக் கனிம நிலங்கள் மீது கட்டணங்களை விதிக்க தடை விதிக்கிறது. மத்திய அரசு விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே வரிகளை இனி மாநிலங்கள் விதிக்க முடியும்.

பிரிவு 13- இன் கீழ் மத்திய அரசு வகுக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் மாநிலங்கள் செயல்பட வேண்டும்.

மேலும் இது போன்ற வரிகளை மாநிலங்கள் இதற்கு முன்பு விதித்து, சுரங்க ஒப்பந்ததாரர்கள் அந்த நிலுவைத் தொகையை இதுவரை செலுத்தாமல் இருந்தால், இனி அந்நிலுவைத் தொகையை மாநிலத்திற்கு செலுத்த வேண்டியது இல்லை.

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது!

2024 சூலை 25 அன்று, 9 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு கனிமவளங்கள் மீதும், சுரங்கங்கள் மீதும், வரி மற்றும் செஸ் விதிக்க மாநில அரசுகளுக்கு உரிமை உள்ளது என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

நீதிபதி எஸ்.எச். கபாடியா (S.H. Kapadia) தலைமையிலான உச்ச நீதிமன்ற அமர்வு, கனிம வளங்கள் மற்றும் நிலத்தின் மீது வரி விதிக்கும் உரிமை தொடர்பான முந்தைய தீர்ப்புகளுக்கும் பிற தீர்ப்புகளுக்கும் இடையே முரண்பாடு இருப்பதாகக் கூறி, இந்த வழக்கினை மார்ச் 30, 2011 அன்று ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு (Constitution Bench) பரிந்துரை செய்தது. பல ஆண்டுகள் கழித்து, 2024 - இல் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான ஒன்பது நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு அமர்வு, (8:1 என்ற பெரும்பான்மை அடிப்படையில்) மாநில அரசுகளுக்கு ஆதரவாக வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது. "கனிம வளங்கள் மற்றும் சுரங்க நிலங்கள் மீது வரி விதிக்கும் முழு அதிகாரம் மாநில அரசுகளுக்கே உள்ளது " என்பதை உச்ச நீதிமன்றம் இந்தத் தீர்ப்பின் மூலம் உறுதி செய்தது.

2024 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் அமர்வு தனது தீர்ப்பில், "மத்தியப் பட்டியலின் பிரிவு- 54 (Union List- Entry 54) என்பது "கனிமங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கும் மட்டுமே அதிகாரம் அளிக்கிறதே தவிர, மாநிலங்களின் வரி விதிக்கும் அதிகாரத்தைப் (Taxing Power) பறிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ இப்பிரிவு மத்திய அரசுக்கு வழிவகை செய்யாது" என்று தெளிவாகக் குறிப்பிட்டது.

இந்நிலையில், மோடி அரசு Mines and Minerals Development and Regulation Act of 1957- என்ற சட்டத்தை, மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட 'நிலம்' என்ற கூறு மீது தன் அதிகாரத்தை நிலைநிறுத்தும் வகையில், பன்னாட்டு பெருமுதலாளிகளுக்கு

மகிழ்வூட்டும் வகையில், மாநில உரிமைகளைச் சிதைக்கும் வகையில், கூட்டாட்சி முறைக்கு எதிரான வகையில், நாடாளுமன்ற சனநாயக முறையையே (Parliamentory Democracy) கேலிக்குள்ளாக்கும் வகையில், ஒரு திருத்த மசோதாவை எவ்வித விவாதமும் இன்றி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளது. தற்போது 543 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் மக்களவையில், பாரதிய சனதா கட்சியின் கூட்டணிக்கு 319 உறுப்பினர்கள் ஆதரவு இருக்கிறது. இதை பயன்படுத்தி, மோடி அரசு தனக்கு விருப்பமானதை எல்லாம் சட்ட மாக்கிக் கொண்டிருக்கிறது!

தன் விருப்பப்படி சட்டங்களையெல்லாம் திருத்துகிறது!

இந்தியாவில் ஒரே அரசுதான் இருக்கிறது! அது மோடி தலைமையிலான இந்தியஒன்றிய அரசு மட்டுமே!

மோடி அரசு மாநில அரசுகளை ஊராட்சி மன்றங்களாக ஆக்குகிறது! இழப்பு மக்களுக்குத்தான்!

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள ஒவ்வொரு தேசியஇன மக்களும் தங்கள் நிலப்பரப்பில் உள்ள கனிம வளத்தின் மீதான அதிகாரத்தை இழக்கிறார்கள்!

மக்களுக்கும் அதிகாரம் இல்லை! மாநில அரசுக்கும் அதிகாரம் இல்லை! வளங்கள் எல்லாம் பன்னாட்டு முதலாளிகளுக்கே!
வாரி வழங்குகிறது மோடி அரசு!

ஒரு கேள்வி!

நாடாளுமன்றத்தில் எவ்வித விவாதமும் இன்றி தன் விருப்பம் போல மோடி அரசு ஒரு சட்டத்தை இயற்றிக்கொள்ளலாம், இருக்கிற சட்டங்களை திருத்திக் கொள்ளலாம்!- என்றால் எதற்காக நாடாளுமன்றத்திற்கு மாநிலங்களிலிருந்து உறுப்பினர்கள் செல்ல வேண்டும்? ஒன்றிய அரசு செய்யும் அநியாயங்களுக்கு இவர்கள் அமர்ந்திருப்பது ஒரு நியாயப்பாட்டை அல்லவா வழங்கிக் கொண்டிருக்கிறது! நாடாளுமன்றத்தில் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்பு எதைச் சாதித்துக் கொடுத்திருக்கிறது?

தெரிந்தே தடுமாறி விழுந்த விஜய் அரசு!

கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் தாலுகாவில் உள்ள 8 கடற்கரை கிராமங்களில் சுமார் 1,144.06 ஹெக்டேர் பரப்பளவிலான கடற்கரை மணல் பகுதியில் இந்திய அரசுக்குச் சொந்தமான ஐ.ஆர்.இ.எல் (IREL - India Limited) நிறுவனம் அணுக்கனிம சுரங்கத் திட்டத்தைச் செயல்படுத்த முயன்று வருகிறது.

நில ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஒப்புதல் காலம் (Land Reservation Validity) முடிவுக்கு வருகிற நாளன்று, ஜோசப் விஜய் தலைமையிலான தமிழ்நாடு அரசு மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு (10 சூன் 2027 வரை) நீட்டித்து அரசாணை வெளியிட்டது. முந்தைய திமுக அரசு காலநீட்டிப்பு வழங்க மறுத்து வந்த நிலையில், விஜய் அரசு அனுமதிக்கப்பட்ட காலம் முடிகின்ற நாளன்று கால நீட்டிப்பு வழங்கி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு இத்திட்டத்திற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருந்த தமிழக வெற்றிக் கழகம், தற்போது ஆட்சியில் இருக்கும் நிலையில் அதே திட்டத்திற்கான நில ஒதுக்கீட்டை நீட்டித்திருப்பது நேர்மையற்ற இரட்டை நிலைப்பாடு. தமிழ்நாடு மாநில அரசின் செயல்பாடு அச்சத்தை தருகிறது. இதுபோன்று செய்யக்கூடாதவற்றை இனிமேலாவது செய்யாமல் கவனமாக இருக்க வேண்டும்!

மூன்று தரப்பினருக்கும் கடமை இருக்கிறது!

(1) தமிழ்நாட்டில் இருந்து செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகக் கடுமையாக போராட வேண்டும். பிற மாநிலங்களில் இருந்து வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது குறித்த புரிதலை உருவாக்கி நாடாளுமன்றத்தை முடக்க வேண்டும்!

(2) தமிழ்நாடு சட்டமன்றம் இதுகுறித்து உரிய கவனம் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டின் நிலப்பரப்பைப் பறித்துக் கொள்வதற்கும், கனிம நிலங்கள் மீது தனக்கே அதிகாரம் என்று ஒன்றிய அரசு அறிவித்துக் கொள்வதற்கும் வேறுபாடு இல்லை. அரசியல் சட்டம் அளித்துள்ள உரிமையைக் கூட விட்டு வைக்க ஒன்றிய அரசு தயார் இல்லை. தமிழ்நாடு சட்டமன்றமும் தமிழ்நாடு அரசும் இதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டும். உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் மாநில உரிமையைக் காக்க வேண்டும்! மோடி அரசு கொண்டுவந்துள்ள சட்ட திருத்தம் செல்லாததாக்கப்பட வேண்டும்!

(3) தங்களுடைய மண்ணையும் அதில் உள்ள கனிம வளங்களையும் காத்துக் கொள்ள முன்வராத எந்த இனமும் அழிந்து போகும். ஒன்றிய அரசின் இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து தமிழ்நாட்டின் மக்கள் களம் இறங்கிப் போராட வேண்டும்!

இவரை விட்டால் ஆள்வேறு இலையா?

ஆற்றைப் பலுக்கும் அரைவேக் காடோ
ஆளும் அமைச்சர் தமிழர் நாட்டில் ?
கூற்றைக் குழப்புங் குறையைச் சொன்னால்
கூட்டிப் பிதற்றுங் கதைகள் ஏனோ ?
சாற்றும் மதமா சறுக்கல் விளக்கம் ?
சான்றாய்ச் சமயச் சான்றோ ருளரே!
போற்றித் தமிழைப் புரக்கும் உணர்வே
போக்கைத் திருத்திப் புரிய வைக்கும் !

எண்ணல் கூட விங்கே பிழையா ?
எழுத்தால் மொழிய யின்னும் பிறழ்வா?
கன்னற் றமிழைக் கழறா நாவார்
களங்கம் தானே வகிக்கும் பதவி !
அன்னைத் தமிழை அறியா வொருவர்
அமைச்சாய் விளங்க லவலந் தானே !
இன்னும் தமிழை மியல்பாய்ப் பலுக்கார்
இவரை விட்டால் ஆள்வே றிலையா?

- ஆசு

தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்

திரு. தென்முகநம்பி, சென்னை	1000
தோழர் செங்குட்டுவன், ஆவடி	500
திரு. பிச்சைவள்ளிநாயகம், சென்னை	500
முனைவர் முத்தமிழ், தஞ்சை	400
திரு. செ. பன்னீர்செல்வம், மதுரை	500
திரு. பெத்தையா, அரசப்பாளையம்	1000
திரு. முத்தரசன், அரசப்பாளையம்	1000
திரு. நாவை. சிவம், மணற்பாறை	1000
திரு. இராசு, சென்னை	200
திரு. மணிவண்ணன் சென்னை	200

நூல் அஞ்சல்

பெறுநர்:

விடுநர்:
தமிழ்நாடு, 4/197, பல்லவன் நகர், 3 ஆவது தெரு,
மேடவாக்கம், சென்னை 600100 கைபேசி 97108 75283,

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005